# முரீது விளக்கம்

## என்னும் இரத்தினச் சுருக்கம்




ஹாஜி M.A.ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர்: | முரீதுவிளக்கமென்னும் இரத்தினச்சுருக்கம் |
| ஆசிரியர்: | ஹாஜி முஹம்மது அப்துல் காதிறு ஸைனுத்தின் ஷாஹன்ஷா |
| முதல் வெளியீட்டார்: | மொ.அ. ஷாஹுல் ஹமீது லெப்பை ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலை, திருவல்லிக்கேணி, சென்னை |
| முதல் பதிப்பு ஆண்டு: | *1932* |
| இரண்டாம் பதிப்பு ஆண்டு: | மே 2008 |
| இரண்டாம் வெளியீட்டார்: | ஹாஜி எம்.எ. ஷாஹுல் ஹமீது அண்ட் ஸன்ஸ், எண்.21 (ப எண். 10), காயிதே மில்லத் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை 600005. Phone:- 28544061; 9841253109 |
| பக்கங்கள்: | 48 |
| அச்சிட்டோர்: | ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை. |
| ஹதியா: | ரூ 15/ |


## பொருளடக்கம்


1. முன்னுரை.......................................................I

2. இந்நூலை எப்படி படிக்க வேண்டும்..................V

3. அல்லாஹுத் தஆலாவின் துதி ஆக்கியோன் பெயர் முதலியன.................................................VI

4. ஒரு மனிதனுக்கு முரிதென்ற பேர் வாய்ப்பதெப்படி?................................................1.

5. முரீது பெற்றவன் அறியும் படியானவைகள்..........6.

6. முஷாஹிதா என்பதென்ன?............................17.

7. முறாக்கபா என்பதென்ன?............................17.

8. ஷைகு என்ற பேருக்கு லாயக்குடையவன் யார்? லாயக்கில்லாதவன் யார்?.........................18.

9. ஒருவன் முரீதில்லாமல் அமல் செய்தால் அவனுக்கு கிடைக்கும் பயன்பாடு என்ன? ஒருவன் முரீது பெற்று அமல் செய்தால் அவனுக்கு கிடைக்கும் பயன்பாடு என்ன?.............20.

10. கலிமா விளக்கம்.........................................21.

11. அறிவென்பதென்ன?.....................................25.

12. தொழுகையினுடைய அந்தாங்க நிய்யத்து விளக்கும் உலுச்செய்தல்...................................27.

13. தொழுதல்...................................................28.

14. தொழுகையைப் பற்றி சில குறிப்புகள்...........30.

15. சந்தக் கும்மி................................................32.

# முன்னுரை

''அல்லாஹூ'' என்ற வஹ்தத்துல் உஜீதாகிய ஏகநாயனுக்கே புகழ் அணைத்தும்,

அந்த உஜீதின் வெளிப்பாடாய் மஜ்ஹரே அதம் நூராகிய போரொளி பிரகாஸம் முஹம்மது முஸ்தஃபா ரஸீலே ரஹீம்மீது சலாமும் சலவாத்தும் சர்வசதாகலமும் சொரிந்தருளட்டும். அஹ்லெபைத்து சையது சாதாதமார்களான அண்ணவர்களின் கிளையார் குடும்பத்தினர், சத்திய சீலர்களான சஹாபாத் தோழர்கள், தாபயீன்கள், தபவுத்தாபயீன்கள் ஷரீஅத் சட்டமாமேதைகளான இமாம்கள், அவுலியாக்கள், ஃபகீர்மார்கள், நாதாக்கள் நல்லோர்கள், ஷுஹதாக்கள், சான்றோர்களான நம் முன்னோர்கள் என்று அணைத்துப்பேர்கள் மீதும் ஏகவல்லோனான அல்லாவின் சாந்தியும், சமாதானமும் என்றென்றும் நிலவட்டுமாக!

ஆமீன்!! பிஜாஹே சய்யதில் முர்ஸலீன்!!!

ஷரீஅத் என்ற கட்டுக்கோப்பான சட்டங்களுக்கு கட்டுப்பட்டும், தரீகத் என்ற தத்துவார்த்த மெஞ்ஞான மறுவாழ்வில் தரிப்பட்டும் நடக்கும் நற்பாக்கியத்தை எம்பெருமானார் கண்மணி நாயகம் மூலம் பெற்று, பயின்று, செயலாக்கி سینہ بسینہ சீனபஸீனா நெஞ்சோடு நெஞ்சாய் அனுமதிப்பெற்று அஹ்லே பைத்து கிளையார்கள் வழியாக, வீரத்தின் விலைநிலமாய், மதீனத்து கல்விப்பட்டனத்தின் நுழைவாயிலாய், பஞ்சதனே பாக் என்ற நூரின் ஊற்றுக் கண்களாய், முஹம்மது, அலி, ஃபாதிமா, ஹசன், ஹுசேன், மூலாதாரமாய், சார்பீர், சவுதா கான்வாதே என நான்கு ஷேக்மார்களை கொண்டு பதிநான்கு கண்மாய்களாய், உலகில் இஸ்லாத்தினை நிலை நிறுத்தியது தான் தரீகா என்னும் மெஞ்ஞான பாட்டையாகும்.

இந்த மெஞ்ஞானப் பாட்டையில் காதிரியா, சிஷ்திய்யா, நக்ஷபந்தியா, சுஹ்ரவர்தியா என்று புரிதல்கள் உண்டாகின.

இறைநேசச் செல்வர்களான அவுலியாக்களின் தலைமை பீடமாய் பீரேலாஸானி, மஹ்பூபே சுப்ஹானி, மாஷூகே எஸ்தானி, ஹர் முஷ்கில் ஆசானி, மெய்நிலைக் கண்டஞானி, வள்ளல் கவுஸுஸ் ஸமதானி ஸைய்யிதினா ஷேக் அப்துல்காதிர் ஜீலானி,

முஹ்யத்தீன் ஆண்டகை,

காஜாயகாஜகான் அதாயே ரஸூல் காஜா முயீனுத்தின் சிஷ்த்தி,



சன்ஜரி, அஜ்மீரி, தமிழகத்து பாதுஷாவாம் காதர் வலி காதிரி கன்ஜே சவாயி மற்றும் லெச்சோபலெச்ச அவுலியாக்களின் வாயிலாக உலகெங்கும் அமைதியாய் இஸ்லாம் என்ற ஏகத்துவ இறைமார்க்கத்தை எத்திவைத்து, ஆங்காங்கே பிரகாசித்துக் கொண்டுள்ளார்கள்.

அவர்கள் அல்லாவில் அழிந்துபட்டு குதிலபில்லா قُتِلَ بِاللہ என்ற மெஞ்ஞான யதார்த்த, தத்துவார்த்த வழிமுறைகளை, பயிர்ச்சியுர செய்து, போதித்து கற்றுத்தரும் பாட வழியை தரீகா என்று கூறுகிறோம்...

இந்த தரீகா என்ற வழிமுறை ஷரீஅத் என்ற சட்டத்தை முழுமையாய் கடைபிடித்து ஒழுகியபின் அதன்முடிவு எல்லையிலிருந்து தரீகத் என்ற படித்தரம் துவங்கும் அதையே அறிஞர் ஷேக் சாதி அவர்கள் தமது பாரசீக கவியில் இப்படி சுட்டிக்காட்டுகிறார்.

شریعت را مقدم دار اول    کہ طریقت از شریعت نیست بیروں

**ஷரீஅத்ரா முகத்தம் தார் அவ்வல்,**

**கே தரீஅத்அஸ் ஷரீஅத் நேஸ்த் பைரூன்...**

பொருள்:- முதலில் ஷரீஅத் என்ற சட்டத்தை பேணி ஒழுகு. ஏனெனில் தரீகத் என்பது ஷரீஅத்திலிருந்தே தவிர வேறில்லை....

ஷேக்குமுர்ஷது.....

தரீகத்தின் பரிபக்குவ ரகசியங்களின் ஞானங்களை நாடி வருவோருக்கு அவரவர்தம் தாங்கும் சக்திக்கேற்ப, முறைப்படுத்தி கொடுப்பவர், முர்ஷத், ஷேக், பீர், குருவாவார்.

முரீது....

ஷரீஅத்தில் முழு ஈடுபாட்டுடனிருந்து, உலக ஆசாபாசங்களை, இச்சைகளை துரந்து, ஷேக்கிடம் பைஅத்து என்று தீட்டை பெற்று வாக்களித்து தவுபாச்செய்து தம்மை முழுமையாய் ஷேக்கிடம் ஒப்படைத்து கொள்பவரே முரீது ஆவார். முரீது தமது ஷேக்கிடம் எப்படி இருக்கவேண்டும் என்பதை பாரசீக பழமொழி இப்படி கூறுகிறது.

میّت بدستِ غسّال

(மையத் பதஸ்தே கஸ்ஸால்) அதாவது குளிப்பாட்டுபவரிடம் மையத்து தம்மை எப்படி ஒப்படைத்து கொள்கிறதோ அந்தப்படிக்கு ஒரு முரீது தம்மை ஷேக்கிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று ஒரேவாக்கியத்தில் பரிபூரண ஒப்படைப்பை பறை சாற்றுகிறது...

ஷிரிஅத் என்ற சரியைக்கு கட்டுப்பட்டு, தரீகத் என்னும் சூட்சமத்தை அறிந்து செயல்படுத்திய நம் முன்னோர்களும், மூதாதைகளும், அரசனாகிலும், ஆண்டியாகிலும், நிம்மதியான நல்வாழ்வினை வாழ்ந்து, நல்லோராய்த் திகழ்ந்து, உலகளாவிய அளவில் நற்பெயரை இஸ்லாத்திற்க்கு பெற்றுத் தந்திருப்பது வராற்று ஏடுகள் சாட்சி பகர்கின்றன.

ஆனால் தற்காலத்தே வெரிபிடித்த வஹாபியத்து என்ற விஷம், தவ்ஹீது, ஷிர்கு, பித்தத் என்ற போர்வைக்குள் நுழைந்து கொண்டு, மார்க்கம் ஆகுமானதாக காட்டும், மௌலூது, மீலாது, ஜியாரத், பாத்திஹா, கந்தூரி, கொடியேற்றம் இன்னபிர நல்லமல்களை, ஏலனமாகவும், இளக்காரமாகவும், நாற்றநடையில், நூல்கள், நோடீஸ்கள், ஊடகங்கள், வாயிலாக புற்றீசல்போல் தோன்றும் ஜமாஅத்துக்களின் தான்தோன்றித்தனமான விதண்டாவிதங்களை ஒதிக்கிதள்ளிவிட்டு, ஞானவான்களின் மேன்மையை நாம் மதிக்க துவங்க வேண்டும்.

நல் அமல்களில் மிகமிக சிறந்த வழிகாட்டியாயுள்ளது தரீகத்தின் தத்துவங்கள்தான் அதை அறிந்துகொள்ள ஓர்நூல் வேண்டும் என்று பட்டது, புதிது புதிதாக ஏதோ பெயரளிவிலான நூல்களே எழுதுகிறார்கள், அதிலும் குழப்பங்களை கொண்டு வந்து விடுகிறார்கள், பலமுறையோசித்த ''தர்கா'' இதழ் வெளியீட்டகம், நம் முன்னோர்களில் மார்க்க அறிஞர்கள் சிறப்பான நூல்களை யாத்துச் சென்றுள்ளார்கள், அவற்றையே வெளியிடலாமே என்ற சிந்தனையின் போது ''சாஹெப் இல்ல நூலகத்தில்'' ''முரீது விளக்கம் என்னும் இரத்தின சுருக்கம்'' நூலை தேர்ந்தெடுத்து வெளியிட முடிவெடுக்கப்பட்டது.

சென்னை திருவல்லிக்கேணி, மொ.அ. ஷாஹுல் ஹமீது லெப்பை அச்சக எந்திர சாலை தமிழ்கூறும் நல்லுகிர்க்கு குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மார்க சம்பந்தமான நூல்களை வெளியிட்டு அரும்பணி செய்து தொண்டாற்றி வந்துள்ளதை யாராலும் மறுக்கமுடியாது, அந்தத் திருப்பணியை அவர்தம் குடும்பத்தினர் தொடர்ந்து செய்துவருவதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.



அவர்கள் அச்சகம் சார்பாக 1932ல் வெளிவந்த முரீது விளக்கம் என்னும் இரத்தின சுருக்கம் என்ற இந்நூலை தென்காசி ஷைகுமுஹம்மது ஹனீபதுல் காதிரி ஷாஹின்ஷா ஆலிம் சாஹிப் அவர்கள் குமாரர் ஷாஹீமுஹம்மது அப்துல் காதிரு ஜைனுத்தீன் அவர்களால் கோர்வை செய்யப்பட்டதை மீண்டும் அச்சிட அனுமதி கோரியபோது அவர்களே அச்சிட்டு தருவதாக கூறி அனுமதியளித்ததால் இன்று இந்நூல் உங்கள் கைகளில் உள்ளது. அதற்காக ''தர்கா'' வெளியீட்டகம் தம் பணிவான நன்றிகளை சென்னை திருவல்லிக்கேணி ஹாஜி M.A.ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ் அவர்தம் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கிறது.

இந்தநூல் அச்சுப்பொருப்புகளை தம் அலுவலக வேலைகளுக்கு இடையே சிரமம் பார்க்காது செய்து கொடுத்த சையத் அப்துல்காதர் (எ) அஜீஸ் அவர்களுக்கும் நன்றி.

இன்ஷா அல்லா இதுபோன்ற முன்னோர்களின் சிறப்பான நூல்கள் வெளியிட ''தர்கா'' இதழ்வெளியீட்டகம் நாடியுள்ளது, அது தாங்கள் படித்து பார்த்து வழங்கும் கருத்துக்கொப்ப தொடரும் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

வஸ்ஸலாம்,

இவன்

''தர்கா'' மாதயிதழ்

வெளியீட்டகம்

74/176A,முதல்மாடி,காந்திசிலை,

இரட்டை மஸ்தான் தர்கா(எதிரில்),

தஞ்சை-613 001.

# இந்நூலை எப்படி படிக்க வேண்டும்?

எல்லா புத்தகங்களைப் படிப்பது போன்ற சர்வசாதரணமாக படிக்காமல் ஒளு செய்து, இதய சுத்தியுடன் புனிதம் கருதி, வேறெந்த நினைவையும் மனதில் கொள்ளாமல் வாசிப்பீர்களாக!

நிறுத்தி நிறுத்தி ஒன்றுக்கு இரண்டுமுறை, மனதில் அசைப்போட்டு, புரிய வந்தபின் படிப்பதை தொடருங்கள், சிறுக சிறுக விளங்கவரும்.

எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த ஞானவான்களை அஹ்லெபைத் சாதாத்து மஷாயகின்களை தேடிச்சென்று சிறப்பாய் பயிர்ச்சி பெற்று விளங்கிக் கொள்வீர்களேயானால் பரிபூரண மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட தெளிவை உணர்வீர்கள்.

ஷேக், முர்ஷதை தேடி...

யாரிடம் முரிது பெருவது, எங்கே ஷேக்கை தேடிபோவது இதில் தான் நீங்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் தரிகத்துக்குள்ளும் வஹாபியத் புகுந்து கொண்டுள்ளது. ஆம்! அல்லா பொய்சொல்வது சாத்தியம், அல்லாஹ்வின் ஹபீபும் மஹ்பூபுமாகிய ரஸூலுல்லாஹ் எம்மை போன்றவர்கள், அவுலியாக்கள் இறந்து மண்ணோடு மண்ணாகிப் போனார்கள் என்று பற்பல வஹாபிய கருத்துக்களை தங்கள் நூல்களில், எழுதியும் பேசியும், கஷ்துஅடித்து, சில்லா சுற்றித்திரியும் கூட்டத்தாருக்கு வக்கலாத்து வாங்குவோரும் தங்களை தரீகா வாதிகள் போல் காட்ட முற்படுகிறார்கள். அவர்களை கண்டவுடன் ஒதுங்கிவிடுங்கள். சுன்னத் வல் ஜமாஅத்து அதீதாக் கொண்டோரை அனுகி ஆய்ந்து மனசாட்ச்சி பட்டியலிடும், நல்லவரை ஷேக்காக தேர்ந்தெடுங்கள்.

எல்லாம் வல்ல அல்லா, ரஸீலின் பொருட்டால், வலிமார்கள் வஸீலாவால் ஹாதியான ஷேக்கை காட்டித்தருவானாக ஆமீன்! பிஜாஹே சய்யதுல் முஸ்ஸலீன்!! அவுபாயேவசிலீன்!!!



## அல்லாஹுத் தஆலாவின் துதி.

## ஆக்கியோன் பெயர் முதலியன.

பிஸ்மில்லாஹி, சூட்சாதி (மறைவான)சூட்சமறைவாய் கைபு (மறைவாய்) ஹுவியத்தின்(அவனென்றதின்) நுஸூலாய்த்(தோற்றமாய்) தொகையாய்(வெளிப்பாடு), ஜாமிதாய்(ஜடப்பொருளாய்), நுக்தாய்(அனுவாய்), வஹதத்தாய்(ஒருமையாய்), உள்ளமையி லருவுக்கருவாய், உருவுக்குருவாய், அறிவுக்கறிவாய், நாட்டத்துக்கு நாட்டமாய், வலுபத்துக்கு (சிறப்புக்கு) வலுப்பமாய், கேள்விக்குக் கேள்வியாய், பார்வைக்குப் பார்வையாய் சொல்லுக்குச் சொல்லாய், சர்வமாய்(அனைத்துமாய்) ஒன்றிலு மொட்டாமல், வேண்டுதல் வேண்டாமையற்றுத் திகழ்ந்துநின்ற அல்லாஹுத் தஆலாவையும், ஹக்குக்கும்(இறைவனுக்கும்), கல்குக்கும்(படைப்பினங்களுக்கும்) சம்பந்தமாய் சர்வத்துக்குங்(அனைத்திற்கும்) கருவாய், அசிலைக் (மூலத்தைக்) கொண்டு மறைக்கப்பட்ட வஹதத்தென்னும் (ஒருமை யென்னும்) நம்முடைய ஆண்டகை(ஆன்மீக குரு) முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களையும், பழிப்புள்ள மூடாங்கக் (அறியாமையான) குபிர்களையைக் (இறைநிராகரிப்புகளை) களைந்து, துதியுள்ள (புகழுக்குரிய) ஞானாங்கமென்னும் (ஞானமென்னும்) நேர்வழி விதையை நிஃமத்தென்னும்(அருட்கொடை யென்னும்) கைக் கொண்டு விதைத்தவர்களாகிய அந்நபியின் கோத்திரத்தாரையும், அவ்விளைவை (விளைச்சலை) யாவர்களு முபயோகிக்கும் (உபயோகிக்கும்)படியாய்க் கொடுத்தருளிய அன்னபியின் (அந்த நபியின்) அஸ்ஹாபிமார்கள்(தோழர்கள்) முதலான வர்களையும் புகழ்ந்து, சலவாத்தும், சலாமுஞ் சொல்லி ஹலறத்து, ஷைகுனா, ஷைகுல் இசுலாம்(இஸ்லாம்) ஒல்முஸ்லிமீன் (வல்முஸ்லிமீன்) செய்யிதுனா முஹையதீன் அப்துல் காதிர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தரீக்காவையும்,

ஹலறத்து ஷைகு அபுல்ஹசன் ஷாதிலி றஹிமஹுஉ முல்லாஹி யவர்களின் தரீக்காவையும், ஹலறத்து ஷைகு பஹாஹவத்தீன் குஷபந்தீ றஹுஉமஹுஉ முல்லாஹியவர்களின் தரீக்காவையும் எடுத்து நடக்குபடியானவனும், ஹாதி (வழிகாட்டி)ஷெய்கு அப்துல் காதிறு ஷாஹன்ஷா நபியன்னபுஸுஉ றஹுஉமஹுஉ முல்லாஹுஉடைய அடுமைப்பயலும்(நெறுக்கம் கொண்டவனும்), தென்காசி ஷைகு முஹம்மது ஹனீபத்துல் காதிரி ஷாஹன்ஷா ஆலிம் ஸாஹிபின் பிள்ளைகளிற் கீழ்மைப்பட்டவனும், நபிஸல்லல்லாஹுஉ அலைஹிவஸல்ல மவர்களுடைய ஷபா அத்(பரிந்துரை) தளவிற்பிரிக்கப்பட்டவனும், ஸாலிஹான(நல்ல) ஸாலிக்கான(ஞானபாதையின் ஷைக்குகளான) பேர்களின்(மனிதர்களின்) பாதத்தின் தூசியானவனும், சிற்றறிவுடையவனுமாகிய ஷைகு முஹம்மது அப்துல்காதிறு ஸைனுத்தீன் ஷாஹன்ஷா என்பவன் இந்த முரீதுவிளக்கமென்னும் இரத்தினச் சுருக்கமான கிதாபை(நூலை) சூபியாக்களாற் (ஞானவான்களால்) செய்யப்பட்ட கவுலுல் செமீயுல் காசியத்துல் அவுலியா ஜாமிஹுஉல் உசூல்(நூலின் பெயர்), ரிஸாலத்துல் குசைரிய்யா(நூலின் பெயர்), துஹுஉபத்துல் பற்றா(நூலின் பெயர்) முதலிய அரிதான கிதாபுகளில்(நூல்களில்) நின்றுந் தெரிந்தெடுத்து (தேர்வுசெய்து) முஸ்லிமானவர்கள் நன்மையைச் செய்து இருபதிலும் (இருஉலகத்திலும்) சுகத்தைப் பெற்றுக் கொள்ளும்படி தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டனன்(அச்சிட்டேன்).

இதையறிந்து காமிலான (பரிபூர்ணமான) ஷைகைக் கைபிடித்து முரீது பெற்று அமல்(செயல்புரிந்து)செய்து வருகிறவர்கள் பேரில் அல்லாஹுஉத் தஆலா இருபதிலும் கிருபை றஹுஉமத்துச் செய்வானாகவும், ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.



بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

## முரீதுவிளக்கமென்னும்

# இரத்தினச் சுருக்கம்.

### ஒரு மனிதனுக்கு முரீதென்றபேர் வாய்ப்பதெப்படி[கிடைப்பதெப்படி]?

முரீதென்ற அக்ஷரம் நாலு எழுத்துக் கொண்டது. அதில் ஒவ்வோரெழுத்திற்கு ஒவ்வொரு சொல்லுண்டு.

அதில் 1-வது முரீது பெறுகிறவன் தன்னுடைய ஷைகு சொல்லிய திக்ரைக் காதிற்கேட்டு அதின் மஹனாவை(அர்த்தத்தை) மனதிலேதரிபடுத்திச் (உறுதிபடுத்தி) சொன்ன நாட்டத்தளவிலும், அதைத் தெரிந்து கொள்வதளவிலும் நாட்டமுடையவனாக (தேட்டமுடையவனாக) இருப்பது.

2-வது அல்லாஹ்வுடைய கற்பனையைக்(நாட்டத்தை) கொண்டும், அவன் கட்டளையைக் கொண்டும் பொருந்தி நடப்பது.

3-வது உள்ளமையுடையவனாய்க் காணப்பட்ட வஸ்து(பொருட்கள்) யாவையும் அல்லாஹ்வேயன்றி வேறில்லையென்று உறுதிகொள்ளுவது.

4-வது தன் சுவாசத்தை(மூச்சை) வீண்போக்காமல் ஒவ்வொரு சுவாசத்திலும், எந்த ஹாலிலும்(நிலையிலும்) அல்லாஹ்வுடைய திக்றைக்கொண்டு தாயிமாகவே (நிரந்தரமாகவே) நடத்திவருவது.

இன்னும் ஒருவன் ஒரு ஷைகைக் (இறை நேசரைக்) கைபிடித்து முரீது பெறுவானாகில் முந்தவே (முதலில்) அவன் பத்துக்காரியமறிய (பத்து விஷயத்தை யறிய) வேண்டியது. அதில்,

1-வது தௌபா, அதாவது அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறொன்று மில்லையென்று உறுதிகொள்வது.

2-வது ஷுஹுது, அதாவது துனியாவை(உலகத்தை) உவப்பதையும்(நேசிப்பதையும்), அதை அழகாக்குவதையும், வலுப்பமாக்குவதையும்(வசதியாக்குவதையும்), இச்சிப்பதை(ஆசை கொள்வதை)யும் விட்டு மீளுவது.

3-வது யாதொரு(எந்த ஒரு) கருமங்கள்(காரியங்கள்) இன்னகாரியத்தால் உண்டாகியது என்கிற கருத்தை வைப்பதைவிட்டும் நீங்கி ஹக்களவிற்(இறைவன் அளவில்) பரஞ்சாட்டுவது(ஒப்படைப்பது).

4-வது நபுஸு (மனது என்னும் ஆத்மா) கேட்டபடி ஷஹுவத்தை(இச்சையை) அதிகமாக்குவதைவிட்டு மீளுவது.

5-வது கல்குகளுடனே (படைப்பினங்களுடனே) அதிக இஷ்டம் (நேசம்) பண்ணுவதை விட்டு மீளுவது.

6-வது ஹக்கு(இறைவன்) அல்லாதளவில் முகம் நோக்குவதை விட்டு மீளுவது.

7-வது தன் நபுசைப்(மனதைப்) பேணுவதைவிட்டுத் தெண்டிப்புக்(முயற்சி) கொண்டு மீளுவது.



8-வது எக்காலமும் அல்லாஹ்வுடைய ஏவலைச்செய்து அவனால் அடியார்களுக்குக் கொடுக்கும் ஹுக்முக்கு(கட்டளைக்கு) ஒப்புக் கொண்டு அல்லாஹுத் தஆலாவைப் பொருத்தமாக்குவதிலே (திருப்திபடுத்துவதிலே) தாயிமாக(நீடித்து) இருப்பது.

9-வது அல்லாஹ் அல்லாததை நினைப்பதைவிட்டு மீளுவது.

10-வது ஹவாவை(மனோ இச்சையை)விட்டும், குவ்வத்தை(தன் ஆற்றலை) விட்டும்அன்னியத்தை(நான் என்ற கர்வத்தை) யில்லாமையாக்கித் தன் ஷைகு சொல்லிய குறிப்பளவில் (கட்டளையின் பக்கம்) நோட்டமிடுவது (கவனம் செலுத்துவது).

இவைகளல்லாமல் முரீதுக்கு வேண்டுமானதைப் (தேவையானதை)பற்றிச் செய்யிதுனா காஜா பஹாவுத்தீ நகுஷபந்தி றஹிமஹு முல்லாஹுடைய தரீக்காவில் நின்றும், ஹலறத்து காஜா அப்துல் காலிக்குல் அல்தவானி றஹுமஹு முல்லாஹு பதினொரு காரியத்தையெடுத்துக் காட்டுகிறார்கள்.

அதில் 1-வது, யாதுகர்து, அதாவது நாவாலும், கல்பாலும் (உள்ளத்தாலும்) திக்கிறைக்(திக்ரை) கொண்டும் உறுதிப்படுத்துவது, எஃனி(அதாவது) நீ ஹக்கைச்(உண்மையின் ஆளத்தை) சந்திக்கிறவறையில் நீ ஷைகில் நின்று மெடுத்துக் கொண்ட திக்கிறை அதிகப்படுத்துவதில் தாயிமாக(நிரந்தரமாக) இருந்துக்கொள்.

இன்னும் திக்கிறென்ற நாட்டமானது ஹக்கை (இறைவனை) வலுப்பஞ்(நேசிப்பு) செய்கிறது கொண்டும், பிரியம் வைக்கிறது கொண்டும் கல்பைத்(உள்ளத்தை) தாயிமாக்கி(நிரந்தரமாக) ஹாலிறாக்கி (ஆஜராக்கி) வைக்கிறதாயிருக்கு மென்று காஜா பாஹாவுத்தீன் றஹுமஹு முல்லாஹு சொல்லுகிறார்கள்.

2-வது, பாஜுகெஸ்து, எஃனி(அதாவது) ஹக்களவிலே (இறைவனின் பக்கம்) திரும்புவது.

**3-வது, நிகாதாஸ்து,** எஃனி(அதாவது) அந்தத் திரும்புதலின் பேரிற்(பேரில்) பேணுதலா யிருப்பது.

**4-வது, யாதாஸ்து,** எஃனி(அதாவது) பேணுதலில் ஆராய்தல் செய்கிறது மல்லாமலும்(அல்லாமலும்), இன்பமாகிய பாதையின்பேரில் ஹக்கைச்(ரப்பை) சந்திப்பதைக் கொண்டே உருதிகொள்வது.

**5-வது, ஹேஷ்தர்தம்,** எஃனி(அதாவது) மறதியைவிட்டும் அல்லாஹ்வுடைய ஞாபகத்துடனே மூச்சு வெளிப்படுவது.

**6-வது, சபர்தர்வத்தன்,** எஃனி (அதாவது) இந்த முரீதுபெற்றவனின் சபறாவது(வழியாவது), தன் சரீரத்திற்(உடலில்) பழிப்பான வன்னிப்பில்(வற்றில்) நின்றுமுண்டான கெட்ட எண்ணம், கெட்டபேச்சு, கெட்டசெயல், நபுசு(ஆன்மா), கேட்டபடி கொடுப்பது ஆகிய இவைகளை விட்டும் நீங்கிப் புகழாகிய மஹரிபத்துடைய(இறைஞானமுடைய) அமலிலும்(செயலிலும்), ஷரீஅத்துடைய செயலிலும் நடந்து வருவது.

**7-வது நஜர்பர்கதம்,** எஃனி(அதாவது) முரீதுடையவன் ஹறாமான(தடைசெய்யப்பட்ட) பார்வையைவிட்டும் நீக்கி ஹக்குடைய(இறைவனுடைய) சமுகத்தளவிற் பார்க்கிறது கொண்டு நாட்டம் வைக்கிறது.

இன்னும் இதைப்பற்றிப் பாரிபுன் ஈசல் பகுதாதி என்பவர்கள் ஹல்லாஜு, றஹுமஹு முல்லாஹு இடம் முரீதென்ற பேருக்கு(மனிதனுக்கு) லாயக்குடையவன் (தகுதியுடையவன்) 'யார்?' என்று கேட்க அவர்கள் சொன்னதாய்ச் சொல்லுகிறார்கள்.

ஒருவன் தன்னுடைய நாட்டத்தில் முந்தியே அல்லாஹ் அளவிற் சேர்த்துத் தனக்கு ஹாசிலாகிற(உண்டாகிற) வரையில் வேறு யாதொரு வஸ்தளவினு மீளாதிருப்பது, அவ்விதம் ஹாசிலானால்(உண்டானால்) ஷெய்கு சொன்ன மஅனா(அர்த்தம்) இடம்பாடாகும்(சாத்தியமாகும்),



அதனையே முரீதென்ற சொல்லுக்கு லாயக்குடையவனென்றும் (தகுதியானவன் என்றும்) சொல்லலாம். அவ்விதம் இல்லாவிடில் ஷைகுடைய பதக்கத்தை(சான்றிதழை) பெற்றவன் என்று மட்டிற் சொல்லலாம்.

**8-வது, கல்வத்தார் அஞ்சுமன்,** எஃனி(அதாவது) முரீதுக்கு வேண்டுமானது, ஒருவன் வெளியுறுப்பை கல்குகளுடன் (படைப்பினங்களுடன்) பேசிப்புழங்கின(பேசிபழகிய)தாயும் உள்ளுறுப்பை ஹக்களவிற்(இறைவனின் பக்கம்) சேர்த்ததாயும் (இணைத்தும்), தன்னுடைய கையை துனியாவுடைய (உலகத்தினுடைய) சுகுலிலே(காரியங்களில்) பராக்காயும்(கவனம் வைக்காமலும்), கல்பை(உள்ளத்தை) ஹக்கைக் கொண்டு பராக்காயு மிருக்க(கவனமின்றி இருக்க) வேண்டும்.

**9-வது, உக்கூபுஜமானி,** எஃனி(அதாவது) ஒவ்வொருநாளும் தானடத்தியவைகளைப்(தான் செய்தவைகளை) பற்றிச் சரியோ சரியல்லவோவென்று பார்த்து நலமாகவிருக்குமாகில் (நல்லதாக இருந்தால்) ஷுக்கூர்(நன்றி) செய்து தப்பிதமாயிருக்குமாகில்(தவறாக இருந்தால்) இஸ்திக்குபாறு(பாவமன்னிப்பு)செய்து மீளுவது.

**10-வது, உக்கூபி,** அத்தி, எஃனி(அதாவது) திக்று கல்பியால்(உள்ளத்தின் தியானம்) வேறு எண்ணங்களைவிட்டும் ஒருமைப்படுத்துவது.

**11-வது, உக்கூபு கல்பி,** எஃனி(அதாவது) ஹக்களவில் ஹாலிறாக(ஆஜராக) விருப்பதைவேண்டி கல்பை முழிப்பாக்கிவைப்பது (விழிப்புணர்ச்சியாக்கி வைப்பது), இன்னும் அவனுடைய கல்பில் திக்கிரை நடத்துவது வேணுமாயிருக்கும். அந்த திக்கிறைச் செய்வதுடன் சனோபரி என்னும் தாமரைக்காயை நோக்கிப் பார்க்க வேண்டுமாயிருக்கும். அந்தத் தாமரைக் காயானது இடது மார்புக்கு இரண்டங்குலத்திற்குக் கீழிருக்கும். இதைத் தான் கல்பு மஜாஸி என்று சொல்லப்படும்.

மேற்சொல்லியவைகளில் ஒன்றேனும் அறியாதவர்கள் நாங்களும் முரீதுபெற்றுதானிருக்கிறோமென்று (இருக்கிறோம் என்று) சொல்லித் திரிகிறார்கள்.

### முரீதுபெற்றவன் அறியும்படியானவைகள்.

அரிய(கிடைப்பதற்கரிய)பெரிய நாயகத் தனத்துடைய அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா நபுசு குல்லில்(அனைத்து ஆத்மாவில்) நின்றும் வெளியாகியபடியால் முரீதுபெற்ற ஒருவன் ஏழு சிபத்தையும் (தன்மையையும்), ஏழு நபுசையும் (ஆத்மாவையும்) அறிய வேண்டிய கடமையாயிருக்கிறது.

### சிபத்தேழாவன[அந்த ஏழு தன்மைகள்].

1-வது ஹயாத்து(உயிரோடிருப்பது), 2-வது இல்மு(கல்வி), 3-வது இறாதத்து(நாட்டம்), 4-வது குதறத்து (வல்லமை), 5-வது சம்உ (கேட்குதல்), 6-வது பஸர்(பார்த்தல்), 7-வது கலாம்(பேசுதல்) மேற்சொல்லிய ஏழு சிபத்தும்(தன்மைகளும்) நம்முடைய உடலிலே தாத்தாகும்(ஒட்டியதாகும்), றூஹுக்கு(உயிருக்கு) கொடுத்த அமானிதமா(அமானிதம்) யிருக்கும்.

### நபுசு ஏழா[அந்த ஏழு ஆத்மா]வன.

1-வது நபுசு அம்மாறா:– இதின்குணம்கெட்டசெயல், பகீல்தனம்(கஞ்சத்தனம்), இச்சை, மாட்டாங்கித்தனம் (கெட்டகுணம்), பெருமை, பொறாமை, முகத்துதி(முகஸ்துதி) இவைகளாயிருக்கும்.

இன்னும் நபுசைப்பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொல்லியதாக அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள்.

அஃதாவன(அதாவது) இந்த நபுசுக்கு உடந்தையானவை மூன்று, அதில் 1-வது இபுலீசு, 2-வது ஹவா(மனோ இச்சை), 3-வது துனியா(உலகம்).

இபுலீசின் குணமானது, தீனைவிடும்படி போதிப்பது,



இவன் போதனைக்குட் சிக்கியவர்கள் தீனைவிட்டு மாறிவிடுவார்கள்.

ஹவாவின்(மனோ இச்சையின்) குணமாவது பலவிதமான இன்பங்களைத் தான் அனுபவிக்கும்படி ஏவுவது(கட்டளையிடுவது).

இந்தப்படி(இதன்படி) ஏவலுக்கு வழிப்பட்டால் புத்தி வழிகெட்டு புத்தி அவனை விட்டு நீங்கிவிடும்.

துனியாவின்(உலகத்தின்) குணமாவது, ஆகிரத்தை (மறுமையை) நினைக்கவிடாமல் மறக்குஞ் செயலில் அழைக்கும். இந்த அழைப்புக்கு வழிப்பட்டால் ஆகிரத்துடைய(மறுமையுடைய) நயம்(இன்பம்) இவனைவிட்டும் நீங்கிவிடும்.

இந்த நாலு பகையருடைய துஷ்டத்தனத்தை விபரிக்க (விவரிக்க) விரியும். ஆதலால் இம்மட்டிற்(இந்தளவிற்) சுருக்கிச் சொல்லப்பட்டன.

இந்த நால்வருடைய விரோதத்தால் வரும் நானென்கிற (நான் என்ற) பெரிய துடக்கிலும் (பெரிய அசுத்தத்திலும்), வேறென்கிற சிறு துடக்கிலும் (சிறிய அசுத்தத்திலும்), இவனைத் துகட்டிப்பாவ துன்பத்தாற் சிந்தை (மதி) மயக்கமென்கிற ஜனிபிடித்து (ஆட்டிப்படைத்து), மோட்டுத் (பயங்கரமான) தனமென்னும் ஹலாக்காகிய(நாசமாக்கும்) மௌத்தை (மரணத்தை) அனுபவிக்க முன்பாகத்தானே திக்கிறென்கிற வாளினாலும், தக்குவா (இறை நம்பிக்கை) வென்கிற கேடகத்தாலும், அப்பகைஞனுடன் பெரியதாகிய யுத்தஞ் (போர்) செய்து துனியாவை (உலகை) வெறுக்குதல், தாட்சிமை கலப்பருதல்(மனத்தூய்மை)போற் கொத்தவைகள் (ஒப்பானவைகள்) கொண்டு அடக்கி "லாஇலாஹ இல்லல்லாஹ்" யென்கிற திக்கிரை அலற்றிச் (சப்தமிட்டு) செய்தால் அதுமடங்கிச் (அது ஒடுங்கி) சரீஅத்தை (ஷரீஅத்தை) யெடுத்தமகாம் நாசூத்திலாவான்(உயர்வான அந்தஸ்திலாவான்).

2-வது நபுசுலவ்வாமா:– இதன்குணம் கெடுதலான

மேலெண்ணம், பொய், குபாடம் (மோசடி), படிறு, புறம்கோள், மனமுரண்டு இவைகளை நல் நடத்தையாகிய அமலை (செயலை) க்கொண்டு அடக்கி 'லாஇலாஹ' என்பதையுள்ளடக்கி 'இல்லல்லாஹவை' வெளிப்படுத்தி திக்கிறு ஜல்லியாகச் (சப்தமிட்டு, உணர்ச்சியுடன்) செய்தால் அதுமடங்கித் தரீகத்தை யெடுத்த மகாம் (அந்தஸ்து) மலகூத்திலாவான் (அது பெரிய அந்தஸ்து).

**3-வது நபுசு முல்கிமா:–** இதன் குணம் உதிப்பு உள்ளதைக் கொண்டு நிறுபாகிக்கிறது (செயல்படுகிறது), இல்மை (கல்வியை) தேடுகிறது, தாட்சணை(பணிவு), தௌபா (பாவமன்னிப்பு), பொருமை, நலவு, வணக்க மிவைகளாயிருக்கும். இதில் முளிப்பு, தனித்தல், நோன்பு முதலிய நபிலான வணக்கங்களை எடுத்துவருவதுடன் அல்லாஹ் என்னும் திக்கிறை கல்பியாகத் (உள்ளத்தின் திகர்) தனக்குமட்டும் கேட்கச் செய்தால் ஹக்கீகத்தை யெடுத்த மகாம் ஜபறூத்திலாவான் (ஜபருத் எனும் படித்தரம்).

**4-வது நபுசு முத்துமயின்னா:–** இதின் குணம் தன்னைத் தாழ்வை படுத்தி மண்ணைப்போலாக்குவதும், தன்னபுசை ஹக்கிடம் பரஞ்சாட்டுவதும் (ஒப்படைப்பதும்), திக்கிறாலும் (திக்ராலும்) அமலாலும் (செயல்பாட்டாலும்) உள்ளத்தைப் பொருந்தி ஷுக்கூர் (திருப்திபட்டு நன்றி செலுத்துவது) செய்வதாயிருக்கும். அல்லாஹ்வைத் தவிர மற்றும் யாதொன்றையும் காணான். இதைப் பற்றி அல்லாஹுத் தஆலா குர்ஆனில் ஒல்பஜுரி (வல் பஜ்ரி (சூரா)) என்ற ஸூரத்தின் (அத்தியாயத்தின்) ஒடுக்கத்திலே (இறுதியிலே) சொல்லிய ஆயத்தின் பொருளாவது "ஏ கீழாக்கப்பட்ட நபுசே (ஆன்மாவே)! உன்னாயனளவில் மீளு," இதில் 'ஹுவல்லாஹ' என்னும் திக்கிறை றூஹியாகத் (தன் உள்ளத்தின் தியானம்) தன் மனதுள் நடத்திவைத்தால் மஹரிபத்தை (இறை ஞானத்தை) யெடுத்த மகாம் லாகூத்திலாவான்(இது ஒரு இறை நெறுக்கத்தைப் பெற்ற ஓர் அந்தஸ்த்து).

**5-வது நபுசு றாலியா:–** இதன் குணம் சங்கை பெறுதல், துனியாவை வெறுக்குதல், கலப்பறுதல் (இக்லாசுடன்



நடத்தல்), பேணுதல், தெண்டிக்குதல் (முயற்சி செய்தல்) இவைகளாயிருக்கும். இதில் 'ஹுஹு' என்பதை திக்கிறு சிற்றியாகச் (இரகசியமாக) செய்தால் முஹப்பதை (அன்பை) யெடுத்த மகாம் (அந்தஸ்து) ஹாகூத்திலாவான்.

**6-வது நபுசு மறுலிய்யா:–** இதன் குணம் நற்குணம், உள்ளச்சம், உறுதிகொள்ளுதல், மருவுதல் (மாறுதல்), முடுகுதல், திக்கீர்செய்தல் இவைகளாயிருக்கும். இதில் 'ஹூ ஹக்' என்பதை திக்கீரகபியாகச் (மறைமுக தியானமாக) செய்தால், முகுதிதத்துடைய அமுலுடையவனாய் (செயலுடைய வனாய்) மகாம் பரகூத்திலாவான்.

**7-வது நபுசு காமிலா:–** இதில் யாஹுயென்னும் திக்கிரை நாட்டத்தால் நடத்தி அஹ்பாவாகச் (தொடர்ச்சியாகச்) செய்தால் அவன் அவனாகவும், ஷவுக்கென்ற (ஆசை என்ற) ஆசையாலும், தவுக் (இன்பம்) கென்ற இன்பத்தாலும், விஜிதானைப் (உணர்ச்சியைப்) பெற்றுக்கொண்ட முகாலபதமுன் லில்ஹவாதிதி கியாமுன்பி நபுசிகி (அது ஒரு அந்தஸ்து) என்ற அமலுடையவனாய் மகாம் ஜம்கூத்திலாவான்.

இவ்விதம் நடத்துவதுடன் திக்கிறுல் அன்பாசியாகிய (மூச்சு திகர்) 'ஹு' என்ற திக்கிறை ஒரு நொடி நேரமாவது மறந்திராமல் சுவாசம் ஏற்றத்திலும், இறக்கத்திலுங் கொண்டுவர வேண்டும்.

ஒருவன் ஒரு ஷைகிடம் முரீதுபெற்றிருக்கிறா னென்பதற்கு விபரம் ஷைகு (ஷைக்) ஹல்லாஜி றஹுமஹுல்லாஹு 'ஆகரியா ஹக்காபிக்' கென்னும் கித்தாபிற் சொல்லி வருபவைகள்.

ஒருவன் முரீது பெற்றால் அவனை நாட்டம் பெற்றவனென்று சொல்லலாம்.

ஒருவன் தன்னுடைய நாட்டத்தை ஹக்குடைய இறாதா (நாட்டம்) வென்னும், நெருப்பாலே கருக்கி அந்த நாட்டத்தைத் தரிப்படுத்தி, அகப்பார்வையைக் கொண்டு தன் ஷைகு கொடுத்த மகாமன் மஹமூதா (புகழுக்குரிய

அந்தஸ்து) என்னும் கண்ணாடியிலே தன் ஸூறத்தையும் (தோற்றத்தையும்), தன் ஷைகுடைய ஸூறத்தையும், தன் நபியுடைய ஸூறத்தையும், தன் றப்புடைய ஸூறத்தையும் தெரிசித்து (சந்தித்து) வருகிறவனே முரீது பெற்றவன்.

இவைகளைக் குறித்து ஷாபிஈ றஹிமஹுல்லாஹு சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது நன்மாராயம் (நற்செய்தி) பெற்றவன் யாரேயானால் தன்னுடைய வெளிக்கண்ணைமூடி அகக்கண்ணைக் கொண்டு தன் றப்பைத் தெரித்தானே (தெரிந்தானே) அவனாயிருக்கும்.

அப்படி அகக்கண்ணைக் கொண்டு பார்ப்பவனுக்குக் கண்ணாடியிலே தன் ரூபத்தைக் (உருவத்தை) காணுமாப்போலே (காணுவது போல) தன்னுடைய றப்புடைய தஜல்லியாத்துத் (வெளிப்பாடு) தன் ஸூரத்தைப் (தோற்றத்தை) போல தெரிசிப்பான். றப்பென்றது றூஹுகுதூசியாயிருக்கும் (பரிசுத்த ஆன்மா). அது ஹக்குடைய (இறைவனுடைய) முகமாயிருக்கும். அதைப்பற்றி குர்ஆனில் "ஹக்குடைய(இறைவனுடைய) முகந்தவிர மற்றதெல்லாம் பனாவாயிருக்குமென்று (அழிதலாயிருக்கும்)" என்று அல்லாஹுத் தஆலா சொல்லியிருக்கிறான்.

அல்லாஹுத் தஆலா றூஹுகுத்தூசியைப் (பரிசுத்த ரூஹான) படைப்பது அக்கு ஆதியான (ஆரம்பமான). ஏழு சிபத்தைக் (தன்மை) கொடுத்தான். அவையாவன ஹயாத்து (உயிர்), இல்மு (கல்வி), இறாதத்து (நாட்டம்), குதரத்து (ஆற்றல்), ஸம்ஹு (கேள்வி), பஸர் (பார்வை), கலாம்(பேச்சு).

ஆதிக்கு அனாதியான சிபத்து ஏழு. அவையாவன. தீபு, இல்மு(கல்வி), ஹயாத்து(உயிர்), ரீஹு(காற்று), நாறு(நெறுப்பு), நூறு(ஒளி), அம்று(ஏவல்).

அனாதிக்குச் சோதியான சிபத்து ஏழு, அவையாவன. பகாதி ஹின், லியாவு (ஒளி), தகாரத்து (சுத்தம்), உல்பத்து



(இணக்கம்), ஹறாதத்து(உஷ்ணம்), நபுசு (ஆத்மா).

**றூஹுக்கு அனாதியான சிபத்தில் நின்றும் சோதியான சிபத்துண்டான விபரம்:-**

முந்தி ஹயாத்தில் (உயிரில்) நின்றும் அழியாததால் 'பகா'(தரிபாடு)வென்ற பெயரைப் பெற்றது. இல்மில் (கல்வியில்) நின்றும், அறிவுள்ளதாய் 'திஹின்' என்ற பெயரைப் பெற்றது. நூறில்நின்றும், ஒளியுள்ளதாய் 'லியாவு' (ஒளி) என்ற பெயரைப் பெற்றது. தீபில்(பரிசுத்தம்) நின்றும், அன்னியத்து (நான் என்ற) கயிரியத்து (நான் அல்லாதது) என்னும் வேற்றுமையைவிட்டும் துப்புர (சுத்தமாக்கப்பட்ட) வாக்கப்பட்டதாய்த் தகாரத் (சுத்தமானது)தென்ற பெயரைப் பெற்றது. அம்றில் (ஏவல்) நின்றும், யகூவியத்தைக் (விலக்கல்) கொண்டு மருவுதலானதாய் (மாற்றமானதாய்) 'உல்பத்' (இணக்கம்)தென்ற பெயரைப் பெற்றது. நாறில்(நெருப்பில்) நின்றும் உசும்புதலானதாய் (எழுந்ததால்) 'கறாரத்'(சூடு) தென்ற பெயரைப் பெற்றது. ரீஹல் (ரீஹ் எனும் வார்த்தையிலிருந்து, காற்று) நின்றும் காற்றுண்டாய் உசும்புதலானதாய் நாடியுள்வாய் 'நபுசு' என்ற பெயரைப் பெற்றது.

முன்னர் சொல்லப்பட்டவை யாவையும் ஒருவனுக்குள் சுல்பென்றுபேர் பெற்ற சூரென்னுங் (ஊது குழல்) குழலுக் கொப்பாகிய (கிளையாகிய) பிடரி நரம்பின் கீழ் பலதுக்கை (மனித உடலின் பிடரி நரம்பு கீழ்பகுதி) யென்ற லாமலிபுடைய ("لا"என்ற எழுத்துடைய) ஸூரத்தாகிய (தோற்றமாகிய) கொப்புழுக்கு (தொப்புழுக்கு) எட்டு அங்குலத்துக்குக் கீழ் சபாவென்னும் வட்டத்தினுள் அமா ("அமா") யென்னும் நுக்தாவாகிய (புள்ளியாகிய) வித்திற் சேர்க்கப்பட்டன. இந்த தலத்தைத்தான் உந்திக்கமலமென்று சொல்லப்படும். இந்த உந்திக்கமலத்தில் நின்றும், சுவாசம் (மூச்சு) எழும்பி இருதய கமலமென்ற தாமரைக்காயைச் சுற்றி நுறை ஈரலிர் செரிந்து (சேர்ந்து) அங்கிருந்து முண்டக் கமலமென்னும் சுழிமுனையில் வந்து அதில்நின்று நாசியில் (பிடறியில்) வந்து தொங்கோட்டமோடிக் கண்ணார் பதினாறு அங்குலமும், காதால் நாலு அங்குலமும், வாயால் எட்டு

அங்குலமும், மூக்கால் பனிரண்டங்குலமும் எப்பொழுதும் அனா என்கிற அன்பத்தோர் (51) அட்சரத்திலேறி அதில் மூன்றிலொருபங்கு அனா என்கிற அன்னியத்தைக் கொண்டு கழிந்த மற்ற இருபங்கும், ஹு என்கிற பதினொரு அட்சரங்கொண்டு உட்புகுந்து உந்திக்கமலத்தில் அமாவென்னும் நுக்தாவன வித்திற் சேருகின்றது. இந்தத் தலத்தை றூஹு குதுசி இருக்குந்தலமென்று சொல்லப்படும்.

அந்த றூஹு குதுசியாவது ஒருவனிலே தாத்தாயும் (உள்ளமையாவும்) சிபாத்தாயும் (தன்மையாவும்), அசுமாவாயும் (பெயராயும்), அபுஆலாயு (இணைந்ததாகவும்)மிருக்கின்றது.

முன்னர் சொல்லப்பட்ட நுக்தாவை (மூலப்பொருளை) மண்ணும், நெருப்பும் தின்றுவிடாது, கபுரில் நின்று மெழும்பும் (எழும்போது) போது அந்த நுக்தாவைக் கொண்டே எழுப்பப்படும். அதுதான் தாத்து. அதைத்தான் றெப்பென்று சொல்வது. இன்னுமதை (இன்னும் அதை) அகதியத் (ஒருமைத் தனம்) தென்றும் சொல்லப்படும். மற்ற சிபாத்தடங்கலையும் (தன்மை அனைத்தும்) அது சேகரித்துக் கொண்டது.

உஜூதானது (உண்டாகி இருப்பது) உள்ளமையான நுக்தாவான வித்தாயிருக்கும். அதை சபாவென்னும் (பரிசுத்தம்) வட்டத்திலுள்ள மண்ணானது பொதிந்து அதில் நின்றும் இல்மானது (கல்வியானது) சிபாத்தியாகிய (தன்மையாகிய) தண்ணீரால் அதில் நின்றும் ஹயாத்து (உயிர்), அறிவு நாட்டம், சத்துவம் (சக்தி), கேள்வி, பார்வை, பேச்சு முதலியவை யுண்டுபட்டன. நூறாவது (ஒளியாவது) தண்ணீர்பாய்ந்து முளைத்து அசுமாவாகிய (பெயராகிய) இலைகண்டு மரமாக்கிக் காற்றுவீசி அதனால், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் (உடல்) இவைகளெல்லாமுண்டு பட்டன. சுஹுதாவது (துரவரம்) காற்றில் நின்று நெருப்புண்டாக்கி அபு ஆவலாகிய பணறுகளை (மரங்களை) வளரம்பண்ணி அதனால் ஆக்குதல், அழிக்குதல் முதலானவை யுண்டுபட்டன.



இன்னும் உஜூது (உள்ளமை) , இல்மு (கல்வி), நூறு (ஒளி), சுஹுது (சாட்சிமை) என்ற நாலைக் கொண்டு நாலு (நான்கு) அனாசிர் (பூதம்) பிறந்தன. அவைகளில் நின்றும் யாவுமுண்டுபட்டன. முந்திய நாலும் நூறில்நின்றே வெளிப்பட்டன. இந்த நூறு(ஒளி) சிற்றில் (இரகசியத்தில்) நின்றும் வெளிப்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் "நானாகிறவன் அல்லாஹ்வுடைய ஒளியில் (ஜோதியில்) நின்று முண்டானவன். என்னொளியில்நின்று மற்ற வஸ்துகள் யாவு (அனைத்தும்) முண்டுபட்டவன (உருவாக்கப்பட்டன)" என்று திருவுளமானார்கள் (கூறினார்கள்). இதில் வஸ்துவானது நாலுபூதம் நானென்றது ('நான்' என்பது). ஒளிவு (ஜோதி) அல்லாஹ் என்றது சிற்று (இரகசியம்).

இந்த ஆறும் இன்சானிலே (மனிதனிலே) வருவதும், போவதுமாயிருக்கின்றன. அஃதெப்படி (அது எப்படி) யென்றால் அல்லாஹுத் தஆலா இன்சானைப் (மனிதனை) படைக்க நாடித் தன்னுள்ளமையைக் கொண்டு தன்னபுசுமேலே வெளியாக்கினான். அதனால் ஒளிவுபிறந்தது. அந்த ஒளிவு லத்தீபான (நுட்பமான) முஹம்மதுடைய கோலமானது, அந்த லத்தீபுக்கு கதீபான (மூலமான) மண், தண்ணீர், காற்று, நெருப்பு இவை நாலைக் கொண்டு கண்டித்தவுடலைப் (சேர்ந்த உடலை) படைத்து அதிலே தாத்து (உள்ளமை), சிபாத்து (தனமை), அசுமா (பெயர்), அபுஆலாயென்னும்(இணக்கம் என்னும்) நாளைக் கொண்டு போர்த்தித் தனக்கு கலீபாவாக்கி (பிரதிநிதியாக்கி) றூஹைச் சேர்த்தான்.

ஆகையால், இன்சான் (மனிதன்) வந்த வரலாற்றையும், போகும் வரலாற்றையும், ஆறு காரியங்கொண்டு அறியவேணும். இதற்காகவே ஆரீபீன்கள் (ஞானவான்கள்) மப்தஹு (ஆரம்பம்) மஆதுவுடைய (மீழும் இடம்) தெரிசனையை (சந்திப்பு) ஆறு றம்சாக்கி (வகையாக்கி) உள்ளார்கள். அதுவே **"ஸுனன்னஹிமது"** என்று சொல்வர்.

**ஸுனன்னஹிமதாவது.** ஸீன் ('س' என்ற எழுத்து)

சிற்றாகிய (ரகசியமாகிய) ரகசியமாயும், நூன்('ப்'என்ற எழுத்து)நூறாகிய (ஒளியாகிய) ஒளியாயும், இரண்டாம் நூன் ('ப்'என்ற எழுத்து) "நார்" ஆகிய (நெருப்பாகிய) நெருப்பாயும், ஹே('ஃ'என்ற எழுத்து) ஹவாவாகிய (காற்றாகிய) காற்றாயும், மீம் ('ம' என்ற எழுத்து) மாவாகிய (தண்ணீராகிய) தண்ணீராயும், தே ('ட்' வாகிறது) துறாபாகிய (மண்ணாகிய) மண்ணாயும் ஆகிய இவைகளைக் கொண்டே ஆதத்தைப் (ஆதம் நபியை) படைத்தான்.

இதைப் பற்றி அல்லாஹ் ஸுபுஹானஹு வத்தஆலா (அல்லாஹு தஆலா) ஹதீது குதுசியில் (அல்லாஹ்வே கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் சொல்வது) "ஆதமுடைய மக்களை மண்ணாலும், தண்ணீராலும் படைத்தேன். அதில் நபுசையும் (ஆண்மாவையும்), றூஹையும் (உயிரையும்) ஊதினேன்"என்று திருவுளமாயிருக்கின்றான்.

ஆகையால் நபுசு (தன் மனதை) காற்றாகவும் றூஹு நெருப்பாகவுமிருக்கின்றன. றூஹே (ஆன்மாவையும்) நபுசு (தன் மனதிற்கு) க்கு றப்பாயிருக்கும். இதைக் கொண்டே நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் "தன்னபுசை (தன் மனதை) அறிந்தவன் திடனாகத் தன் றப்பை அறிந்தான்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் றூஹிலேநின்றும் நாட்டம், உசும்புதல் (எழும்புதல்), சுவாசம் இவை பிரியுதல் நபுசுடனாயிருக்கும் (ஆன்மாவுடனாகும்). நபுசிலே (ஆன்மாவில்) தத்துவம் யாவும் செய்து, யாவும் நடக்கிறபடியால் நபுசுக்கு நன்மை, தீமை, ஏவல், விலகல், நரகம், சொர்க்கம், கணக்கு, கேள்வி யாவுமுண்டாயிருக்கின்றன (அனைத்தும் உண்டாகி இருக்கும்). உள்ளமைப்புறத்தில் ஹக்கு (உண்மை) த்தானாயிருக்கின்றது. தன்னையில்லாமை (தான் இல்லை என்று உணர்வது) யென்றறிந்தால் நாயனையறிந்தான்.

முரீது பெற்றவனே றப்பு இன்னதென்றும், அப்து (அடிமை) இன்னதென்றும் அறிந்துகொள்வாயாக, றப்பும் (எஜமானும்) ஹக்குத்தான் (அல்லாஹ் தான்), அப்தும் (அடிமையும்) ஹக்குத்தான் (அல்லாஹ் தான்), றப்புத்தான் தன்னுடைய கல்கைக் (படைப்பைக்) கொண்டு



வணங்குகிறான், இதற்கு காரணமாக இதன் கீழே வருகிற கவிதையைக் கண்டறிக.

### முன்னோர்களாற் செய்யப்பட்ட
### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

"ஒன்றேனுமதனா லொன்றுண் டுரைப்பதுண்டாகையாலே
நின்றள வேறாய்த் தன்னிற் றியங்கிடா நிலமையாலே
பின்றிய நினைவுகெட்டாற் பெருமையி ளறிவினுள்ளே
என்றுநின் றிடுவதாலே யிவனவ னென்னலாகும்."

கல்காவது (படைப்பாவது) குறிக்கப்பட்டதாயிருக்கும். குறிப்புடைய புரத்தாலே ஹக்கல்லவென்றும் (இறைவனல்ல), உள்ளமைப்புறத்தால் ஹக்குதானென்றும் அறிவாயாக. உள்ளமைத்தான் ரகசியம், ரகசியமாவது சூட்சாதி சூட்சம் (மறைவிலும் மறைவு).

ஒளியாவது இரண்டு வகையுண்டும், அதில் 1-வது றூஹுக்குள் றூஹு அரூபமென்றது அபரூபம்(உள்ளமையின் உள்ளமை). இதுதான் முஹம்மதிய்யாவுடைய ஹக்கீகத்து (உண்மை நிலை). 2-வது நூறுல் அகஸ்ஸு (தனித்துவமான உயிர்) அதாவது றூஹுல்குதுசு துய்தான (சுத்தமான) உயிர் அரூபமென்றது(உள்ளமை), இது இன்சானுடைய (மனிதனுடைய) ஹக்கீகத்து.

இன்னும் முரீதுபெற்றவன் அறியவேண்டுமானவை பண்டு (பல) (எவமல் அஹது வல்மீதாக்கென்னும் (ஆன்மா உலகின்) ) நாளில் பெற்றுக் கொண்ட மஅரிபா (இறை ஞானம்) என்னுமோர் அமானிதத்தை (பொக்கிஷத்தை) எவ்வளவும்(சிறிதளவும்) மோசஞ் செய்யாமல் நிறைவேற்ற வேண்டியது.

அந்த அமானிதத்தைப் பற்றி அல்லாஹ் ஸுபுஹானஹுவத் தஆலா குர்ஆனிலே திருவுளமாயிருக்கிறான். அதாவது பெற்றுக் கொண்ட அமானிதத்தையுடையவர்கள் அளவிலுங்களை (அனைத்தையும்) இறுக்கும் (பாதுகாக்கும்படி) படிக்கு,

எஃனி (அதாவது) அந்த அமானிதமாவது அல்லாஹுத் தஆலா ஆதியிலறுதி (உறுதி) வாங்கியதாயிருக்கும். அந்த அறுதியாவது(உறுதியாவது), தன் தாத்திய்யாவாகிய (உள்ளமையான) தெரிசனையில் அறுவாகுகள் (உயிர்கள்) நிற்கும்போது அவன் தன்னுடைய நாயகத்தனத்தில் நின்றும், அடுமைத்தனத்தையுடைய (அடிமைத்தனம்) அடையாளத்தைக் கொடுத்து அவைகள் ஒப்புக் கொண்ட நேரத்தில் மலக்கூத்துடைய (இறையாட்சியின்) ரகசிய இவனிலுண்டாச்சுது, அந்த ரகசியம் வாய்த்து (கிடைத்து)முஹபத்துடைய (அன்புடைய) லத்தீபாக்களைத் (நுட்பங்களை) தெரிசிக்கிறது கொண்டு அறுதி(உறுதி மொழி)வாங்கினான்.

ஆகையால் அந்த லுத்துபு (நுட்பம்) என்னும் மாத்திரையைத் தெரிசியாயிருப்பது வேற்றுமையாகிய எண்ணத்தால் மறைந்திருக்கிறது, அந்த எண்ணத்தை நீக்கி ஒன்றுபடுத்தினால் தெரிசிக்கலாம்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமானான். "நாமாகிறது ஓர் அமானிதத்தை வானங்கள், பூமிகள், மலைகள் பேரிலுமெடுத்துக் காட்டிச் சுமத்தினோம் (பொருப்பு சாட்டினோம்). அவைகள் சுமக்கமாட்டோமென்று வருத்தப்பட்டு (பயந்து) விலக்கிக் கொண்டன. அப்போது மனிதன் அதைச் சுமந்து கொண்டான். அதை அறியாத் புறத்தில் மோட்டுத்தனமாகிய (அறியாமை தனம்) அனியாயக்காரனானான்."

அந்த அமானிதத்தின் விபரமாவது தாத்திய்யாவன அறிவாயிருக்கும்.

அல்லாஹுத் தஆலா "இன்னாஅரலுனா"என்னும் ஆயத்திற்கண்ட அமானிதமாவது, எத்திவிக்கப்பட்ட எடுப்பு (ஏவல்) அவன் மறைவாயிருக்கிறதில் உவப்பை (நேசம்) நிலமையாக்கி அச்சத்தை வெளிப்படுத்தியது.

அதாவது, இன்சான் (மனிதன்) அமானிதப்பொருளைச் சுமந்தான் அவன் அநியாயக்காரனானான் என்று சொன்னதின் கருத்தாவது, அல்லாஹ்வுக்கோர் உள்ளமையுண்டென்றும்,



இன்சான் தனக்கோர் உள்ளமையுண்டென்றும், தன்னுள்ளமையை பனாவாக்கித்தான் (அழித்தான்) இல்லாமையானதாய் அறிவுகெட்டதால் தன்னை அநியாயஞ் செய்து கொண்டானென்றது. ஆகையால் இவ்வேற்றுமைச் சொல்லால் அல்லாஹ்வென்றும், றஸூலென்றும் இரண்டாக அறிந்த அறிவையெல்லாம் அறவேமறந்து எல்லாம் அவன்தானென்றும் வணங்குகிறவனும், வணங்கப் பட்டவனும், காண்கிறதும், காணப்பட்டதும் அவனாயிருக்கு மென்று கருத்துவைப்பது.

இன்னும் ஒரு ஆரிபீன் (ஞானவான்) சொல்லியதாவது. நான் மகுசூக்கத்தென்னும் (ஆசைப்படப்பட்டவள் என்னும் பெண்பெயர்) பெண்ணிடத்தில் பாவத்திற் கொடுமையானவை (மோசமானவை) எவையென்று கேட்டேன். அதற்கவள் கொடுமையானவை உன்னுடைய உள்ளமைக்கு வேறொரு வுள்ளமையுண்டென்று கருத்துவைப்பதுதான் பாவத்திலே கொடுமையான பாவமென்று சொன்னாள்.

## *முஷாஹிதா என்பதென்ன?*

தாத்திய்யாவன (உண்மையான) இஸ்மை (பெயரை) றப்பாகக் காண்கிறதும், தன்னபுசை (தன் ஆன்மாவை) றப்பாகக் காண்கிறதும், தன்ஷைகை (தன் ஆசானை)றப்பாகக் காண்கிறதுமாயிருக்கும்.

இன்னும் முஷாகிதாவில் இரண்டு வகையுண்டு. அதில் 1-வது பலஉள்ளமையை ஒருஉள்ளமையிற் தெரிசிப்பது, 2-வது ஒரு உள்ளமையை பலஉள்ளமையிற் தெரிசிப்பது, அது எவ்விதமெனில் ஒரு வித்துப்பலவித்தை (பல விதையை) நோக்குவதும், பலவித்து ஒரு வித்தை நோக்குவதுபோலுமாம்.

## *முறாக்கபா என்பதென்ன?*

உள்ளும் புறமும் ஹக்களவில் (இறைவன் அளவில்) முகம் நோக்குவதுகொண்டு, தன்னுடைய நாட்டத்தை இடைவிடாமற் (இடைவிடாமல்) பார்க்கிறதாயிருக்கும்.

இன்னும் அன்னியத்தை (நான் என்ற தன்மையை) விலக்கிக் கூவியத்தைத் (அவன் என்பதை) தரிபடுத்துகிறதாயிருக்கும்.

***ஷைகு என்ற பேருக்கு லாயக்குடையவன் யார்? லாயக்கில்லாதவன் யார்?***

ஷைகென்ற பேருக்கு லாயக்குடையவனாவது, ஒருவன் புலூக்கு (வயது வருவது) எத்தினவனாய் (அடைந்தவனாய்) அல்லாஹுு தஆலா அளவில் பனாவாகிற (அழிகிற) இல்மையும் (கல்வியையும்), பக்காவாகிற (தரிபடுகிற) இல்மையும் (கல்வியையும்), இன்னும் ஷரீஅத்து, தரீகத்து, ஹகீக்கத்து என்கிற இல்முகளில் (கல்விகளில்) நிறப்பமாகிறவரையில் பனாவான (அழிந்த)ஸூபியாக்களைப் (ஞானவான்களை) போலாராயுதல் (போல ஆராயுதல்) செய்து கொண்டிருப்பவனாயிருக்கும்.

இன்னும் ஷைகென்ற லபுலு (எழுத்து) மூன்றெழுத்துகொண்டது. அதில் ஓரெழுத்திற்கோர் (ஒவ்வொரு எழுத்திற்கும்) செயலுண்டும்.

அதில் **1-வது** ஷரீ அத்தைப் பொருந்தி (திருப்தி கொண்டு) நடப்பதும், ஷஹாதத்தை (ஷஹாதத் கலிமாவை) உண்மையாக்குவதும்.

2-வது அல்லாஹ்வுடைய தஜல்லீயாத்தை (வெளிப்பாடை) யாதொரு கைபியத்தன்றித் (மறைவின்றி) தெரிசிப்பதும்.

3-வது இபாதத்திற் கலப்பறுதலும்(கலப்பில்லாமலும்) அல்லாஹ்வுடைய குணம் இவனுக்குள்ளாவதுமாயிருக்கும்.

அல்லாஹ்வுடைய குணத்தைப் பற்றி நபிஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். அதாவது "அல்லாஹ்வுடைய குணங்கொண்டு நீங்கள் குணப்படுங்கள் (குணமாக்குங்கள்). அல்லாஹ்வுடைய வன்னிப்புக் கொண்டு நீங்கள் வன்னிப்புப் (வர்னிப்பு) பெருங்களென்று,"

இன்னும் செய்யிதினா முஹையதீன் அப்துல் காதிர் றலியல்லாஹுு அன்ஹுு சொல்லியதாவது:- ஷைகென்ற



பேருக்கு லாயக்குடையவன் ஐந்துவகை திக்கிறின் (திக்ரின்) பயனறிய (பயன்பாடு அறிய) வேண்டும்.

அதில் **1-வது திக்று ஜலீ** (உள்ளத்தின் திக்ர்). அதாவது ஒருசெயலில் நிய்யத்து (எண்ணம்) வைப்பது, **2-வது திக்கிறுகல்பி.** அதாவது அச்செயலில் கல்பை காலிறாக்குவது (ஆஜராக்குவது), **3-வது திக்கிறு றூஹி.** அதாவது அச்செயலுக்கு ரித்தான (முரணான) ஒருதலத்தைக் (இடத்தை) குறிப்பிடுகிறது, **4-வது திக்கிறு சிற்றி-(sirri)(ரகசிய)** அதாவது வெளிகோலத்திலே தன்ரூபத்தை (தன் கோலத்தை) ஒரு கண்ணாடியிற் பார்க்கிறது போலவே கல்புக் கண்ணாலே (இதயக்கண்ணால்) தான் குறிப்பிட்ட மக்காமைக் (இடத்தை) கண்ணாடியாகப் பாவித்து அதிலே தன் சூரத்தைத் (தன் தோற்றத்தை) தெரிசிப்பது (சந்திப்பது). **5-வது திக்கிறு கபி (மறைவான திக்ர்).** அதாவது கண்ட ஸூரத்தைத் (தோற்றத்தை) தாயிமாகப் பார்த்து வருவது.

இவ்வைந்தையும் இவைகளுக்கு மேற்காட்டிய செயலையும் அறிந்தவனைத்தான் ஷைக்கென்று (ஆசான் என்று) சொல்லப்படும்.

இன்னும் **"இம்ஹா லுல்வஜகி"** என்னும் கிதாபிற் சொல்லி வருகிறதாவது, அறிவென்கிற மஹரிபத்தாகிய (இறை ஞானம்) கடலில் நாங்கள் எங்களைத் தேடியோடி திசைபிளந்து (திசை தெரியாது) தட்டுக்கெட்டுத் தடுமாறின நேரத்தில் வகைப்பட்ட (பல வகையான) ஆத்துமா வென்றெங்களை நிதானப்படுத்துகிறதில் மீண்டோம். இந்த வசனத்தின் பொருள், மிகவும் பாரதூரமானது இதை யொருவனறிவானாகில் (ஒருவன் அறிந்தால்) அவனே தெரிந்தவனென்றும், ஷைகு என்றும் சொல்லப்படும். ஷைகுமட்டில் (ஷைகு மட்டும்) அறிவதல்ல யாவரும் அறிய வேண்டும்.

ஷைகென்ற பேருக்கு லாயக்கில்லாதவனாவது, அகப்பார்வை இழந்த மிருகம்போலொத்தவனாயும் (ஒப்பான வனாயும்), இன்னும் கல்பிலுள்ள(இதயத்திலுள்ள)

நசல்களான (நோய்களான) முகதாட்சணை(முகஸ்துதி), பெருமை, அகப்பெருமை, தன்னை மதிப்பு(தற்பெருமை), தலைமைத்தனம், சபைமுந்தல் தன்சொல் எங்குஞ் சொல்லவேண்டுமென்று கருத்து வைத்தல், துனியாவை (உலகை) யுவந்து(பிரியம் கொண்டு) நெடுநாளைக்கிருக்க ஆசை வைத்தல்; மேலெண்ணம், பொறாமை, பொல்லா எண்ணம், வஞ்சகம், கெடுப்பு(பிறறை கெடுப்பது), உள்ளொன்று–புறமொன்று வைத்தல், ஆகிறத்தையும் (மறுமையும்), மவுத்தையும்(மரணத்தையும்) மறக்குதல். இன்னும் நாவினாலுண்டாகும் வீண் பேச்சு, வீண் தற்கம், பொய்சொல்லல், சமர்த்துபேசல் (நயவஞ்சகத் தன்மை), பொய்யான வார்த்தைப்பாடு, பொய் சத்தியம், கோள், இருநாவு கொண்டு பேசல், தகுமல்லாததைத்(தகுதி இல்லாததை) துதித்தல் (நினைத்தல்) இவை போல் வனவெல்லாம் (உள்ளவையெல்லாம்) உடையவன் ஷைகென்ற பேருக்கு லாயக்கில்லாதவனாம்.

இன்னும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானதாவது, மேற்கண்ட கெட்ட செயலுடைய ஷைகை ஷைத்தானென்று சொல்ல வேண்டும். அப்படியான ஷைகைக் கைபிடித்துப் பிசகிப்(வழி தவறி)போகாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

***ஒருவன் முரீதில்லாமல் அமல்(செயல் புரிந்தால்) செய்தால் அவனுக்குக் கிடைக்கும் பாயிதா(பயன்பாடு) என்ன? ஒருவன் முரீதுபெற்று அமல்செய்தால் அவனுக்குக் கிடைக்கும் பாயிதா(பயன்பாடு) என்ன?***

முரீதில்லாதவன் செய்யும் அமலாகிறது, கண்ணில்லாத மனிதனைப்போலும், கனியில்லாத மரத்தைப் போலும், கறியில்லாத சோற்றைப் போலும், இன்னும் இவன் மஃறிபா(இறை ஞானம்) என்னும் வசூலைப்(பாக்கியம்) பெற்றுக் கொள்ளமாட்டான்.

இதைப்பற்றி அல்லாஹ் ஸுபுஹானஹுவத் தஆலா குர்ஆனிலே சொல்லிய ஆயத்தின் பொருளாவது



துனியாவில்(உலகில்) கல்பைக்(இதயத்தை) குருடாக்கியவன் ஆகிறத்திலும்(மறுமையிலும்) குருடாகவே இருப்பான். அந்த நாளையில் மூமினானவர்கள் பதினாலாம் பக்கத்து நிலவைப்போல் ஹக்குடைய(இறைவனுடைய) தஜல்லியாத்தாகிய (வெளிப்பாடாகிய) சமுகத்தைத் தெரிசிக்கும்(சந்திக்கும்)போது இவன் தெரிசிக்க(சந்திக்க) மாட்டான், இவன் வழி கெட்ட பாவியாயிருப்பான்.

முரீது பெற்றவன் செய்யும் அமலாகிறது, ஸூபியாக்களாகிய அவுலியாக்களுக்கிடையில் மூன்று காரியத்தைக் கொண்டு அனந்தாகாரனாகிறான் (சொந்தமாக்கிக்கொள்கிறான்).

அதில் 1-வது தன் பாவத்தைவிட்டும் நீங்கியதாய் தௌபாச்(பாவ மன்னிப்பு) செய்து அறுதி(உறுதி மொழி) சொல்லுவதினாலுமே.

2-வது அல்லாஹுத் தஆலா ஏவிய ஏவலின்பேரில் தரிபட்டு அவன் விலகியதை லாகிறிலும் (வெளிரங் கத்திலும்), பாத்தினிலும்(உள்ரங்கத்திலும்) விடுகிறதுடன் அல்லா ஹுத் தஆலா புறத்தில் இவன் கல்பை(இதயத்தை) நேற்பாடாக்கிக்(செலுத்தி) கொழுகுதல்(இணைப்பு) செய்து மஃறிபா வென்னும் கனியைப் பெற்றுக்கொள்வது.

3-வது ஸில் ஸிலாவென்னும்(தொடர்) பேர் வைக்கப்பட்ட ஸாலிஹீன்கள் அவுலியாக்களுடைய பெயர் தொடராக வருவதுடன் இவன் பெயரைச் சேர்ப்பிப்பதுகொண்டு அவர்களுடைய பரக்கத்து உண்டாகிறதுமாயிருக்கும்.

### கலிமாவிளக்கம்.

**கலிமா எத்தனை அக்ஷரங்[வடிவம்] கொண்டது?**

கலிமா இருபத்திநான்கு அக்ஷரங்கொண்டது.

அந்தக் கலிமா ஒரு மரம், அதின் வேராவது ஏழு பூமிக்குக் கீழாகிலும், அதின் பணர்(உச்சி) ஏழு வானத்துக்கும் மேலாலும் வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்து இருக்கின்றது.

அதின் கனிகளை அல்லாஹ்வுடைய உத்தரவின்படி நடந்து வருகிறவர்கள் ருசிபார்ப்பார்கள், அல்லாஹ்வுடைய உத்தரவின்படி நடக்காதவர்கள் அக்கனியின் ருசியை அறியார்கள்.

இன்னும் அந்தக் கலிமாவென்னு மரமானது ஷரீஅத்தாகிய வேராகவும், தரீக்கத்தாகிய கொப்பாகவும்(கிளையாகவும்), ஹக்கீகத்தாகிய இலையாகவும், மஹரிபத்தாகிய பழமாகவுமிருக்கின்றன. ஒருவன் தூரில்(தூரத்தில்) நின்று அந்தப் பழத்தை பட்டிற்(தட்டி) பறித்துத் தின்றுவிடலாம் என்றால், அது இயலாது. வேர் முதலாய்ப் பழமானதால் ஷரீஅத்தென்ற வேரில் நின்று மரமேறிப் பழம்பறித்துத் தின்னவேண்டும்.

அப்படி அந்த பழத்தைத் தின்றாலும் வேர், கொப்பு(கிளை), இலையாகிய மூன்றையும் நீக்கி விடாமல் இம்மூன்றையும் அனுசரித்து வரவேண்டும். முன் சொல்லிய பழமானது எவ்விதமானதெனில் மஹரிபாவென்னும் நூரில்(ஒளியில்) அன்வாறாகவும்(ஜோதியாகவும்), முத்தலக்கான(பொதுவான) உஜூதாகவும்(உண்டாகுதலாகவும்), மகுபூபென்னும்(காதலன் எனும்) மஅஷூக்காகவும் (நேசிக்கப்படக்கூடியவனாகவும்), லிக்காவுல்லா(இறை சந்திப்பு) வென்னும் காட்சியாகவும் பொருந்தி உவமையில்(உதாரணத்தில்) மட்டில்லாத(நிகரில்லாத) பழம்.

அந்தக் கலிமாவென்னு மரத்தை நம்மிற்(நம்மில்) பார்க்கலாம். உவமையார்(உவமையால்) சரீரமென்கிற கண்டிப்பு மாயும்(கலப்புமாயும்), அதின் வேர் ஈமானுக்குள் ஆறு காரியமாயும்(விஷயங்களாகவும்), அதின் கொப்பு இஸ்லாம் ஐந்து காரியமாயும்(விஷயங்களாகவும்), இஸ்லாமென்றது(இஸ்லாம் என்றது) அடுமையைச்(அடிமை) சேர்ந்த சடலத்துடைய அமலுமாயும்(செயலாகவும்), ஈமானென்கிறது ஹக்கைச் சேர்ந்த(இறைவனைச் சேர்ந்த) றூஹுடைய (உயிருடைய) அமலுமாயுமிருக்கின்றன. இந்த இரண்டையுமொன்றுபடுத்துகிற (ஒன்றுபடுத்துகிற) தௌகீகாவது(வழியாகிறது) முஹம்மதைச் சேர்ந்த



றூகானியுடைய(ரூகான்) அமலுமாயும், இதின் பலாபல மஹரிபத்துத் தானாயுமிருக்கின்றன.

இந்த மஹரிபத்தாகிய பலாபலன்(பயன்பாடு) அவன் தன்னளவிற் சார்ந்தவனுக்கல்லாமல் மற்றவர்கள் அனுபவிக்க மாட்டார்கள்.

இன்னும் நம்முடைய உஜூதிலே(உண்டாகி இருக்கிறதில்) நபியுடைய ஒளிவு(பிரகாசம்) இன்னதென்றும் தன்னை யெப்படி(எப்படி)யென்று மறிந்து அவனிவனென்கிற(அவன் இவன் என்ற) பறுஸகுல்குபுறாவாகிய (ஒரு அந்தஸ்து) மகுஅறுஸ்ஸிதுக்(உண்மை வெளிப்படும் இடம்) கென்னுந் தலத்தளவிற் சேரும்படி கலிமாவை மரத்துக்கும், நம்முடைய திரேகத்திற்கும்(உடலுக்கும்) அல்லாஹுத் தஆலா உவமையாக்கினான்.

இன்னும் கல்லாஜு றஹுமஹுல்லா சொல்லுகிறார்கள். என்னுடைய றூஹென்ற(உயிரென்ற) மரம் குவ்வாயும் ('ஓ' வாயும்), நாட்டமென்ற பூமி காவாயும்('டி'வாயும்) அந்தக் குவ்வென்றமரம் காவென்ற பூமியில் இஷுக்கு(ஆசை) என்கிற தண்ணீரால் முளைத்து கஷுபு(இறை ஞானபார்வை) கொண்டு குறைவன்றியே(குறைவில்லாமல்) வளர்கிறது. அந்த மரத்தினின்று வாசம் பரிமளித்து(பிரகாசித்து) வீசுகிறது. கனியோ ஒளிவாகப்(ஒளியாக) பிரகாசிக்கின்றது. அந்த மரம் வளரும்போதே தான் தான் ஹக்கென்று(இறைவனென்று) சொல்லிக்கொண்டு வளர்வதால் நானது(நான் என்பது) கண்டு அனல்ஹக்கு(நான் இறைவன்) என்று சொன்னேன்.

அந்தக் கலிமாவில் குவ்வும்('ஓ' ம்), காவும்('டி' ம்) தவிர மற்றதெல்லாம் பனா(அழிவது). இதை அறியாதவனின் கலிமாவும்(பேச்சும், கலிமா) பனா(அழிவு). அவன் சொல்லிய கலிமாவும் பொய்சாட்சியென்றும் சொன்னார்.

இன்னும் கலிமா ஒன்பது பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

அதில் முதற்பிரிவு:– அஹதியத்து, வஹதத்து,

வாஹிதிய்யா(ஒரு அந்தஸ்து இறைவனை ஒருமைப்படுத்தி அறிவது) இம்மூன்றையும் அது தானென்றறிகிறது(அதுதான் என்று அறிவது).

**இரண்டாம் பிரிவு:–** அலிபு, லாம், மீம் என்றது மூன்றெழுத்து. அவ்வெழுத்தில் அலிபு அல்லாஹ்வாகவும், லாம் அஹ்மதாகவும்(நபியாகவும்), மீம் ஆதமாகவும் அமைந்திருக்கின்றதை அதுதானென் றறிகிறது(அறிவது).

**மூன்றாம் பிரிவு:–** முதலென்றும், நடுவென்றும், கடைசியென்றும் சொல்லப்பட்ட முச்சுடரும்(மூன்று ஒளியும்) அதுதானென் றறிகிறது(அதுதான் என்று அறிவது).

**நாலாம்பிரிவு:–**அருட்பால், பொருட்பால், காமப்பால் மூன்றும் அதுதானென் றறிகிறது.

**ஐந்தாம் பிரிவு:–** உந்திக்கமலம், இருதயகமலம், முண்டக்கமலம் இம்மூன்றும் அதுதானென் றறிகிறது.

**ஆறாம் பிரிவு:–**நாட்டமென்றும், பொருத்தமென்றும், அமையலென்றும் சொல்லிய முப்பொருளும் அதுதானென் றறிகிறது.

**ஏழாம் பிரிவு:–** தகப்பனென்றும், தாயென்றும் நாமென்றும் சொல்லிய மூன்றுவகையும் அதுதானென் றறிகிறது.

**எட்டாம் பிரிவு:–** யாவற்றுக்கு மேலான தவமாகிய(திக்ராகி) யாகும்(ஆகும்) என்ற மூன்றெழுத்தும் அதுதானென் றறிகிறது.

**ஒன்பதாம் பிரிவு:–** கலிமாவின் உயிரெழுத்தாகிய ஹ,கூ,கீ என்ற மூன்றெழுத்தும் அதுதானென்றறிகிறது (அறிவது).

**கலிமாவில் கலி என்பதென்ன? மாவென்பதென்ன?**

கலியானது குவ்வும்('كُ'), மாவாகிறது மீமுமா('مَ') யிருக்கும். "கலி" என்றது ஆண், "மா" வென்பது பெண். இரண்டும் சேர்ந்தும் கும்('كُمْ')ஆகி கலிமாவாச்சுது.



இன்னும் கலியாவது தகப்பனுடைய ஆசை. அதுதான் நினைவு, விந்து, சூடு, கருவு, அந்தக் கருவின் சூடுதான் றூஹு, அதின் பிரகாசம் ஒளியாயிருக்கும், அதின் ஒளியாகிய ஆஷிக்கு(நேசன்) அமையலாகும்போது குவ்வென்ற மொழியாற் (மொழியால்) பாய்ந்தாற் கலிமாவில் முதற்பாதி கடையிற் "குவ்" ஆனது.

மாவாகிறது(மா என்ற எழுத்து) தாயுடைய உவப்பு(நேரம்) அது உதிரமாய்(இரத்தமாய்), உடலாய், குளிர்மையாய் ஹபாத்தாச்சுது(உருவானது), முந்திய கலியென்ற ஆசையாகிய விந்து "குவ்"என்று பாயும்போது மாவாகிய மகுஷுக்கானது (காதலானது) அந்த விந்தை கும்மென்று அணைந்ததினாற்(இணைந்ததால்) கலிமாவிற் பிந்தியபாதில் முதலிலுண்டான "மீம்" ஆனது.

முந்திய குவ்வாகிறது அல்லாஹ்வாகிய தாத்தாகவும்(உள்ளமையாகவும்) பிந்திய மீமாகிறது முஹம்மதிய சிபாத்தாகவும்(தன்மையாகவும்) ஆனது இவ்விரண்டையுமொன்றாக்கினால் "கும்" ஆகும், அது ஆதமாகிய(மனிதனாகிய) நாம் ஆனோம்.

**கலிமா எதிலிருந்து உண்டாகியது?**

கலிமா சிற்றில் (இரகசியத்தில்) நின்று முண்டானதா யிருக்கும், அந்த சிற்றாவது(ரகசியமாகவது) யாதொரு குறிப்பில்லாத இருள்வெளியாக அந்த இருளில் நின்றும் உதிப்பு உன்னலானது வேசிற்று(பிறந்ததுவே இரகசியம்), அந்த சிற்றென்ற இருளில் நின்றும் உதிப்பு உன்னலானதுவேசிற்று. அந்த சிற்றென்ற இருளில் நின்றும், உதிப்பு பிறந்து நினைவென்ற கலத்தால்(பேனாவால்) உணர்வென்ற சாயத்திலே துவைத்துப் புத்தியென்ற பலகையில் அறிவென்ற அட்சரமாய் எழுதப்பட்டது.

✱(பக்கம் 26)***அறிவென்பதென்ன?***

அறிவென்றது "அல்ஹம்து" என்ற ஐந்து அட்சரமாயிருக்கும். இதில் நின்றே கலிமா பிறந்தது.

அஃதெப்படியெனில்(அது எப்படி), "அல்ஹம்து" என்ற

சொல் ஐந்தெழுத்து உடையது. அதில் 1-வது அலிபு('ا')இதில்நின்றும் ஹு('ﻫ')உண்டாகி அது ஆகாசமாகி(பிரகாசம்) றூஹாச்சுது. 2-வது லாம்('ل') அது அல்லாவால் நெருப்பாய் பித்தாய்(ஜவ்வாகி) அதிற் கேள்வியுண்டாச்சுது. 3-வது ஹே('ح') அது இல்லாவாய் காற்றாய் நுரையீரலாய் மூச்சாச்சுது(மூச்சானது). 4-வது மீம்('م') அது இலாகவாய் தண்ணீராய்க் கருயீரலாய்ப் பார்வையாச்சுது. 5-வது தால்('د') அது லாவாய்(இரங்காய்) மண்ணாய் பற்குத்தியாய்ப்(பல் உண்டாகி) பேச்சாச்சுது.

ஆகையால் இந்த "அல்ஹம்து" என்ற ஐந்தெழுத்தில் நின்றும் கலிமாவில் முதற்பாதி பிறந்ததென் றறிய(அறிய) வேண்டும்.

கலிமாவின் பின் பாதியிலே முதல் முஹம்மதென்று துவக்குவதின் கருத்தாவது எங்கும் நிறைந்த வஸ்துவாயும், எல்லா மகிழ்ச்சியும் பொருந்தியதுமா(திருப்திபட்டதுமாய்) யிருக்கும்.

இன்னும் முஹம்மதென்றது ரூபமாயும்(தோற்றமாக), அதின் உஜூது(உண்டானது) ஆதமாயும், றூஹு அல்லாஹ்வாயு மிருக்கும்.

محمد رسول الله

இந்தப் பின்பாதியாகிய கலிமாவின் விபரம், முந்திய மீம்('م') கை, ஹே('ح'), தோள், இரண்டாம் மீம்('م') இடை, தால்('د') , கால், றே ('ر')விலாவிலுள்ள மாங்காய், ஸீன் ('س')ஆவது அஹதியத்தென்ற நுத்துபா(இந்திரியத் துளி) வாயிஹத்தென்ற உதிரத்தசைக் கட்டி லாம்('ل') வாகிய்யத் தென்ற

★ அறிவாகிறது இன்சானுக்கும் (மனிதனுக்கும்) ஹைவானுக்கு (மிருகத்துக்கு) முண்டும். ஆனால், இன்ஸானுக்குப் பகுத்தறிவுண்டும் ஹைவானுக்கோ பகுத்தறிவில்லை. அறிவே இன்சானுக்கு முக்கியமானபொருள், அறிவே தெளகீ தென்னும் (ஒருமைப்பாடென்னும்) பெட்டியைத் திறக்குந் திறவுகோல்.



சுருபம் அலிபு('ا') நாடப்பட்ட றூஹாகிய(உயிராகிய) ஹக்குலாம்(இறைவனிடம்) அந்த நாட்டத்தை முடிவுபடுத்தும் முஹம்மதாகிய ஹயாத்து(வாழ்வு) பிந்திய லாம்('ل') ஆதமாகிய உஜூது(உள்ளது) ஹே('ه') முந்திய குவ்வாகிய(ஹு-'ه') றூஹுடைய கிருபையால் ஹயாத்தாகிய முஹம்மதாக அமைந்தது.

இந்தக் கலிமாவில் ஒயிறெழுத்தாகிய (உயிரெழுத்தாகிய) குவ்வானது றூஹாய்(உயிராய்) அல்லாஹ்வாய்ச் சிரசிலே(தலையிலே) தரித்தது.

ஹியானது('ه') முஹம்மதால் ஹயாத்தாய்த் தாமரைக்காயிலே தரிப்பட்டது.

ஹாவானது('ه') உஜூதாய், ஆதமாய் மூலாதரத்திலே தம்மாகத்(தாமாக) தரிப்பட்டதென்றறியும்.

## தொழுகையினுடைய அந்தரங்க நிய்யத்து(எண்ணம்)விளக்கும் உலூச்செய்தல்.

ஒருவன் உலுசெய்யும்போது முகம் கழுவையில் சிபத்து(தன்மை) ஹயாத்து(உயிர்பெற்றது) மலுகறாகிய(உயர்வான) தன் உஜூதென்கிற றூஹுடைய தஜல்லியாத்தாகிய தண்ணீரைக் கொண்டு ஹக்கையும்(இறைவனையும்), கல்கையும்(படைப்பையும்), ஒன்று படுத்திய அகுலுல்லாவாகிய(இறை அடியார்கள்) வாஹிதென்ற பேரைப் பெற்றுக்கொள்ள வேண்டி நானென்னும்(நான் எனும்) பெருந்துடக்கையும், வேறென்னும்(வேறு எனும்) சிறு துடக்கையும் நீக்கினேனென்று முகங் கழுவுவதுடனே துனியாவை(உலகை) ஆசித்து(பிரியம் வைத்து) வேண்டுதல் தேடிப் பார்க்கிற உள் முகத்தையுங் கழுவினேனென்று நிய்யத்து வைக்க வேண்டும்.

இரண்டு முழங்கைவரையிற் கழுவும்போது இதோடு துன்யாவின் வாழ்வும், ஆகிறத்திற் சொர்க்கமுங் கிடைக்கவேண்டுமென்று கேட்கிற இரண்டு உட்கையையுங்(உள்ளங்கையையும்) கழுவினேனென்று

நிய்யத்துவைக்க வேண்டும்.

தலைக்கு, மஸ்ஃ(மஸஹ்) செய்யும்போது அனானியத் தாகிய(பூத உடலான) சந்தேகம் கொடுக்கும் உடலையையுங் கழுவினேனென்று நிய்யத்துவைக்க வேண்டும்.

கால் இரண்டையும் கழுவும்போது ஹக்கு(இறைவன்) வேறு, கல்கு(படைப்பு) வேறென்கிற பிரிவாகிய எண்ணங்களிற் றரிபடுத்துகிற உட்காலையும் கழுவினேனென்று நிய்யத்துவைக்க வேண்டும்.

## தொழுதல்.

இனி தொழும்போது தக்பீறு கட்டுமுன் கல்கைவிட்டுப் பிரிந்து ஹக்களவிற்(இறைவன் பால்) சேருவதற்காக என்னுடைய அடுமைத்தனமென்(அடிமைத்தனம்)னும், சடலத்தில் நாயகத்தன மென்னும் றப்பு மறைந்திருக்கிற ரகசியத்தைத் தெரிசிப்பதற்காக மிகுறாஜியாகிய(மிஃராஜ்) தொழுகையைத் தொழப்போகிறேனென்ற நிய்யத்துச் செய்து 'அல்லாஹுஉ அக்பர்' என்று தக்பீர் கட்டவேண்டும்.

இந்தத் தக்பீரின் கருத்தாவது ஷறஹுஉடைய(ஷரீஅத்துடைய) அதபை(ஒழுக்கத்தை) பேணவேண்டிதற்கென்றது (கொள்ள வேண்டும்).

முன் சொல்லிய நிய்யத்தோடு தக்பீர் கட்டியபின் முஹைபதான கிபுலாவின் திசையில் முத்தலக்கான(பொதுவான) நாயனை மட்டுப்படுத்தி உன்னுடைய நெஞ்சை அதற்கு நேரே நிறுத்தினாலும், உன்னுடைய எண்ணத்திலவன அத்திசையில் மட்டுப்படுகிறதைவிட்டு முயர்ந்தவனென்று(உயர்ந்தவன் என்று) உறுதிபடுத்தி, உனக்குள் ரகசியமான ஏழு சிபத்தாகிய(7 தன்மையாகிய) பாத்திஹாவை முன்னிறுத்தி நீ அதற்குப் பின் சென்றதாகக் கருத்துவைத்து அந்த ரகசியத்தை உன்னுடைய கல்புக் கண்ணால்(இதயக்கண்ணால்) நோட்டமிடுவதுடன் ஏழாயத்துக் கொண்ட(7 ஆயத்து கொண்ட) ஸூறத்து(அத்தியாயம்) பாத்திஹாவாகிய 'அல்ஹம்தை' மூன்றுபங்கு வைத்து 'அல்ஹம்து' துவக்கி



**"எவுமித்தீன்"** வரையில் ஹக்குடைய(இறைவனுடைய) பங்காகவும் இய்யாக்க நகுபு(**"இய்யாக நஃபுது"**) துவக்கி **"நஸ்தகீன்"** வரையில் ஹக்குக்கு(இறைவனுக்கு) முனக்கும் பொதுவாகிய பங்காகவும் இஹ்தினா (**"இஹ்தினாஸ் ஸிராதல்"**) துவக்கி முடிவுவரையிலுன்னுடைய பங்காகவும், பங்கிட்டோதிய பின்(ஓதிய பின்) சரீர அலங்காரத்தை அழிக்கிற முந்திய பனாவுடைய(அழிவுடைய) மக்காமிற்(அந்தஸ்தில்) சேருகிறேனென்ற நிய்யத்துடன் றுக்கூவிற்(ருகூவில்) போய் அதில் நின்றும் நிமிரும்போது ***(பக்கம் 30)*தல்வீனுடைய(ஒரு அந்தஸ்து) மக்காமிற் சேருகிறதாக நிய்யத்து வைத்து இகுத்திதாலாகிய(நிலையில் நிற்பது) நிலையில் வைத்து அந்த மக்காமுக்குத் தனதாகிய மதப்பான(மிடுக்கான) வார்த்தையாகிய **"ஸமி அல்லாஹுஉ லிமன் ஹமிதா"** என்கிற சொல்லச்சொல்லிய பின்னர் நானென்கிற நினைவை அழிக்கிற இரண்டாம் பனாவுடைய(அழியக்கூடிய) மக்காமிற் சேருகிற நிய்யத்தாக முந்தின ஸுஜூதைச் செய்து அதில்நின்றும் மக்காவுடைய மக்காமிலே(திசையிலே) திரும்புகிறதாக நடுஇருப்பில் வந்திருந்து முன் இகுத்திதலாகிய(நிலையில் உட்கார்தல்) நிலையிற் சொன்ன மதப்பான(மிடுக்கான) வார்த்தையைக் குறித்துப் பொருக்குதல் தேடியவனாக **"றப்பிஇக் பிறுலீ வறுஹம்னீ"** என்ற துஆவை ஓதியபின்னர் நிரப்பமாகிய நாயகத்தனத்துடைய மக்காமிற் சேருகிற நிய்யத்தாக இரண்டாம் ஸுஜூதைச் செய்ய வேண்டும்.

இந்தப்படி எல்லா றக்அத்திலும், எல்லாச் செயலிலும் கல்பு(இதயம்) ஹாலிறாகத்(ஆஜராக)தொழுது முடிகிற நேரத்தில் மக்காமுத் O*(பக்கம் 30)* தம்கீன் என்கிற தலத்தளவிற் சேருகிற நிய்யத்தாக இருப்பிலிருந்து மக்கா முஹம்மதியாவிலே சேர்ந்து மிகுறாஜுஉக்குப் போய் ஹக்குடைய(இறைவனுடைய) சமுகத்தி லிருக்கிறோமென்ற நிய்யத்துடனே **"அத்த ஹிய்யாத்துல் முபாறகாத் துஸ்ஸலவாத் துத்தையிபாத்து"** என்கிற மட்டிலோ(மட்டில் ஓ)தும் போது, உன்னுடைய நாயனுக்கு நீ காணிக்கை வைக்கிறேனென்கிற நிய்யத்துவைத்து **"அஸ்ஸலாமு அலைக்க ஐயுஹன்னபிய்யு வறஹ்மத்துல்லாஹி**

**வபறக்காத்துஹு"** என்கிறவரையில் ஓதிய பின் உன்னுடைய நாயன் நீ வைத்த காணிக்கையை ஒப்புக் கொண்டு மேற்சொல்லியதை யுனக்கு (உனக்கு) ஆண்டவனால் வெகுமானம் தந்ததாக நிய்யத்து வைத்து பிறகு **"அஸ்ஸலாமு அலைனா வ அலாஇபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்"** என்கிறவரையில் ஓதிய பின் உன்னுடைய நாயன் தந்த வெகுமானத்தை உனக்கு மற்றுமுள்ள ஸாலிஹீன்களுக்கும்(நல்லோர்கள்), வளர்ப்பஞ் செய்கிறதாக (சேர்த்து வைப்பதாக) நிய்யத்துவைத்து ஓதுவதுடனே உன்னுடைய நாயனை ஹக்குல் எகீனுடைய(உறுதிகண்) கண்கொண்டு கண்டதுபோல் **"அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு"** என்று நீ சாட்சி சொல்லுகிறதாகவும், **"வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் றஸூலுல்லாஹ்"**யென்று ஹக்குசொல்லுகிறதாகவுமோதி(ஓதி) முடிந்தபின்னர் **"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மது"** என்றோதும்போது(ஓதும்போது) நீ மிகுறாஜுக்குப் போகிறபோது உன்னுடனே கூடவந்த ஹவாசுகளாகிய (உணர்ச்சிகள்) மலக்குகள் சொல்லுகிறதாக நிய்யத்து (எண்ணம்) வைத்துச் சலவாத்தை முடித்த பின்னர் ஹக்குடைய(இறைவனுடைய) சமூகத்திலேயிருந்து கல்குகளளவிலே(படைப்பினங்கள் அளவில்) திரும்பி வருகிறதாக வந்து உன்னுடைய மிகுறாஜின்போது நீ பெற்ற வெகுமானத்தை ஆலத்தாருக்கு(உலகத்தாருக்கு) எத்தி வைக்கிறதாக **"அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி"** என்று வலதுபுறம் **"அகுலுல் ஜமாலுகளுக்கும்,"** இடதுபுறம் **"அகுலுல் ஜலாலுகளுக்கும்"** ஸலாம் சொல்லித் தொழுகையை முடிக்க வேண்டியது.

## தொழுகையைப் பற்றி சில குறிப்புகள்.

நம்முடைய ஆண்டகையான றஸூல் ஸல்லல்லாஹு

---

✸ தல்வீனென்பது முன் ஆதியில் ஹக்குடைய சமுகமிருந்து பிரிந்து இசுலாமென்ற பேரைப் பெற்று ஏவல் விலகலுக் குட்பட்ட தலம்.

0 தம்கீனென்பது ஹக்கும் கல்குமொன்றாகிய ஈமானென்கிற தலம்.



அலைஹிவஸல்ல மவர்கள் என்னுடைய உம்மத்துகளே நீங்கள் எந்த ஹாலிலும்(நிலையிலும்) தொழுகையை விட்டு விடாதீர்கள். அது அமல்கள் யாவற்றிலும் அதிக மகத்துவம் பொருந்தியதென்று திருவுளமானார்கள்.

இந்தத் தொழுகையில் சில ஆராயுதல் வேண்டும். அஃதாவன(அதாவது):-

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள் ஒரு ஸாஅத்து(கொஞ்சநேரம்) நேரம் தன் ரகசியத்தை ஆராயுதல் செய்வது நலமாயிருக்கும். ஒருவன் ரகசியத்தை ஆராயாமல் ஆயிரவருஷம் இபாதத்துச் செய்கிறவனுக்கு அகப்படும் தவாபைப்(நன்மையை) பார்க்கிலும் ஒருவன் ரகசியத்தை அறிந்து ஒரு ஸாஅத்து(கொஞ்ச நேரம்) நேரம் அமல் செய்தால் இவனுக்கு அதிக ஸவாபு(நன்மை) அகப்படும்.

இதைப்பற்றி முகியித்தீனுபுனு அறபி றஹுமஹுல்லாஹுத் தஆலா பைத்துச்சொல்லி இருக்கிறார்கள், அந்த பைத்தாகிறது.

"லைஸத்தஸவ்வுபு பஃலமன்ன முறக்கஅன் அற்கௌத்த ஔக துறதிஸ் திக்பாரி."

"ஔஹஜ்ஜி பைதின்னஔ ஸலாதி தஹஜ்ஜுதின் ஔபத்லி மாலின் ஔ ஸியாமி நஹாரி."

"லாகின் குறாகபத்துல் இலாஹி பிஸிர்ரிஹி வதவாமி திக்ரின் வஹத்திராமி கிபாரி."

இந்த பைத்தின் பொருளாவது ஒருவன் ஆடையை மிகுதி(அதிகம்) அணைவதினாலும்(அணிவதாலும்), கையில் ஆசாப்(குச்சி, தடி) பிடிப்பதினாலும், இஸ்திகுபாறு(பாவமன்னிப்பு) மிகுதி செய்வதினாலும் இன்னும் மக்காமாகிய கஃபத்துல்லாவிற் போய் ஹஜ்ஜு செய்வதினாலும், இரவில் விழித்திருந்து தஹஜ்ஜத்து முதலிய தொழுகையைத் தொழுது வந்ததினாலும், பகலெல்லாம் நோன்பு வைத்ததினாலும் அளவற்ற தானதருமங்களைச்

செய்ததினாலும் சூபியென்ற(இறை ஞானி) பேரைப் பெற்றுக் கொள்ளக்கூடாது. ஆனால் தான் செய்யும் அமல்களில் ரகசியத்தைக் கொண்டும் தன்னுடைய நாயனை நோட்டமிடுகிறது கொண்டும் திக்கிறை அதிகமாக நடத்தி வருவது கொண்டும் பெரியோர்களைச் சங்கிப்பது(சந்திப்பது) கொண்டும் சூபியா(இறை ஞானி) என்னும் பேரைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தப்படி(இதன்படி) அரிந்து அமல் செய்கிறதே சரியான அமலாயிருக்க மனிதனுடைய முகத்துக்காக(முகஸ்துதிக்காக) அமல்செய்து கெட்டுப்போகாமல் அல்லாஹ்வுடைய தீதாறை(முகத்திரை) நாடி அமல்செய்து அவனுடைய தீதாறை யேத்தி(திருப்பொருத்தம் நாடி) நடத்திவருகிற கூட்டத்தில் நம்மனைவர்களையும் அல்லா ஹுத் தஆலா சேர்ப்பானாகவும் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.